
# கடலில் நடந்தது



மாக்ஸிம் கார்க்கி

# கடலில் நடந்தது

(கதைகள்)

—எழுதியவர்—

மாக்ஸிம் கார்க்கி

தமிழில்:

வல்லிக்கண்ணன்

பிரசுரம்:

வெண்புறா வெளியீடு

திருவல்லிக்கேணி : : சென்னை 5.

வெண்புறா வெளியீடு - 1
முதல் பதிப்பு
நவம்பர் - 1951

## இதில் உள்ளவை

1. பெப்பி
2. மனிதனுக்கே வெற்றி
3. கடலில் நடந்தது

அச்சிட்டோர்:
வேங்கடரத்தினம்
பிரின்டர்ஸ்
சென்னை - 6.

விலை எட்டு அணா

# இந்தக் கதைகள்

★

ரஷ்ய இலக்கியத்தில் - உலக இலக்கியத்திலும் கூடத் தான் - மகத்தானதொரு ஸ்தானம் பெற்றுள்ள மாக்ஸிம் கார்க்கியைப் பற்றித் தமிழ் அன்பர்கள் அறிவார்கள்.

கார்க்கியின் கதைகள் கட்டுரைகள் பல தனித் தனியாகவும் புத்தக உருவிலும் தமிழில் வந்துள்ளன; வருகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம்.

கார்க்கியின் மேதையை உணர்த்தும் சிருஷ்டிகள் பலவற்றிலும் சிறந்தவை, தனித்தன்மை வாய்ந்தவை, கருத்தும் கலைநயமும் நிறைந்தவை, அவர் எழுதியுள்ள 'டேல்ஸ் ஆவ் இட்டலி'யில் காணக் கிடக்கின்றன.

சிருஷ்டியிலே மனிதன் உயர்ந்தவன்; மனித வாழ்விலே உழைப்பு உயர்ந்தது; தாய்மை புனிதமானது; மனித நலன்கள் போற்றுதலுக் குரியவை; வாழப் பிறந்தவர்கள் மனிதர்கள்; மனித குலத்திற்கு நல்லது எண்ணி, சக மனிதர்கள் வாழ ஒத்துழைத்து அன்பு காட்டுவதன் மூலம் எல்லோர் வாழ்விலும் இனிமையும் வெற்றியும் நிலவச் செய்யலாம்; மனிதன் மகிழ்வுடன் வாழ மக்களிடத்திலும் உண்மை உழைப்பிலும் நம்பிக்கை கொள்ள வேண்டியது அவசியம் - இத்தகைய எண்ணங்களை வலியுறுத்தும் அழகிய சிறு கதைகள் இவை.

கார்க்கி ஒரு கதையிலே குறிப்பிட்டிருக்கிறார்;

'மக்களுக்கு நன்மை செய்வதைப் பார்க்கினும் மகத்தான இன்பம் வேறெதுவுமில்லை. என்னை

கம்புங்கள்; அதை விட இனியதும் அழகானதும் வேறு எதுவுமே கிடையாது.'

'செப்புக் காசுகள், வெள்ளிக் காசுகளை விட மிக முக்கியமானது உழைப்பு. அதற்காக நீங்கள் பெறக் கூடிய ஊதியத்தை விட அதிக மதிப்பு வாய்ந்தது உழைப்பு. பணம் மறையும்; உழைப்பின் பலன் நிலைத்து நிற்கும்.'

இவ்விதம் மனித மாண்புகளை அழகுபடுத்திக் காட்டும் - வாழ்வின் வளர்ச்சிக்கு ஒளி சிந்தும் - சில கதைகளை இங்கு தமிழாக்கி யிருக்கிறேன்.

இதனால் 'உலகநீதிக் கதை'களையோ, 'பஞ்ச தந்திரக் கதை' வாரிசுகளையோ தான் இப்புத்தகத்தில் எதிர்பார்க்க முடியும் என்று எண்ண வேண்டியதில்லை.

இப் புத்தகத்தில் உள்ளவை கார்க்கியின் சிறந்த சிறு கதைகளில் சில. அழகும் உணர்வும் இனிமையும் உயிர்ப்பும் கலைநயமும் காம்பீர்யமும் நிறைந்த எழுத்துக்கள் இவை. உண்மையான இலக்கியத்திற்குச் சரியான எடுத்துக்காட்டுமாகும்.

'பெப்பி' கதையைப் படித்ததுமே இதை நீங்கள் உணர முடியும். புத்தகம் பூராவையும் படித்தவுடன் என் கூற்றை நீங்கள் ஆமோதிப்பீர்கள். இதில் எனக்குச் சந்தேகமே கிடையாது.

திருவல்லிக்கேணி
நவம்பர் 1951

**வல்லிக்கண்ணன்**

# பெப்பி

பெப்பிக்கு வயது பத்துதான். பல்லி மாதிரி மெலிந்து, ஒல்லியாய், ஓட்ட ஆட்டம் மிகுந்தவனாய் விளங்கினான் அவன். அவனது சூம்பிய தோள்களின் மீது பல வர்ணக் கந்தல்கள் தொங்கும். வெயிலாலும் புழுதியினாலும் கறுத்துப் போன சருமம் துணிகளிலுள்ள எண்ணற்ற கிழிசல்களின் வழியாக எட்டிப் பார்க்கும்.

காய்ந்து போன புல் மாதிரி, கடல் காறறு அபபடியும இப்படியும் ஆட்டி அலைக்கழிக்குமே சருகு, அது மாதிரித் தான் அவனுமிருந்தான். பொழுது விடிந்ததிலிருந்து அடையும்வரை பெப்பி அந்தத் தீவிலுள்ள கற்கள் மீது ஒன்றிலிருந்து மற்றதுக்கென்று தாவிக் கொண்டே யிருப்பான். ஒடுங்காத அவன் குரல் ஓயாது மணிக் கணக்கிலே

‘எழில் மிகு இத்தலி
என்னரும் நாடே!’

என்று இசைந்து முழங்குவதை எவரும் கேட்க முடியும்.

மண் மீது மலர்ந்து மண்டிக் கிடக்கிற வண்ணப் பூக்கள், பாசி பற்றிய பாறைகளிடையே பதுக்கிப் பம்முகிற பல்லிகள், சிரத்தையுடன் சித்தரித்த எழில் உருவங்கள் போன்ற ஆலிவ் மர இலைகளூடும் கலைநய மென்கோடுகள் ஓடும் திராட்சைக் கொடியிலைகளினூடும் அமர்ந்திருக்கும் பறவைகள், ஆழ்கடலின் அடித்தலத்தில் உள்ள அடர்ந்த செடித் தொகுதிகளிடையே வைகும் மீன்கள், நகரின் ஒடுங்கி வளைந்த வீதிகளிலே நடமாடும் அயல்நாட்டு மனிதர்கள் — கத்தி வெட்டு ஏற்ற முகமுடைய தடி ஜெர்மானியன், ஜனத்துவேஷி வேஷம் போட்டுக் கொண்டு திரிபவன் போல் காட்சி தரும் இங்கிலீஷ்காரன், இங்கிலீஷ்காரன்

மாதிரித் தோன்ற வீண் பாடுபடும் அமெரிக்கன், கிலு கிலுப்பை போல் ஓயாக்கூச்சல் நிறைந்து ஒப்பற்று விளங் கும் பிரெஞ்சுக்காரன் — எல்லோரும் எல்லாமும் பெப் பிக்கு விந்தைப் பொருள்களேயாகும்.

பெரியதனப் பண்பால் ஊதி, அதனால் தலை ரோமங்கள் கூடக் குத்திட்டு நிற்குமோ என்னும்படியாக மிளிரும் ஜெர் மானியனை ஒளி நடமிடும் தன் கண்களால் நோக்குவான் பெப்பி. 'மூஞ்சியைப் பாரடா! என் வயிறளவு பெரிசு இருக்கும் போல் தோணுதே இவன் மூஞ்சி' என்று சொல் வான் தன் தோழர்களிடம்.

ஜெர்மானியனைப் பிடிக்காதுதான் பெப்பிக்கு. வீதி கள், மைதானங்கள், நகர மக்கள் ஒயின் குடித்து சீட்டாடி பத்திரிகை படித்து அரசியல் பிரச்னைகளை அலசிப் பிழிந்து தள்ளும் இருண்ட சிறு கடைகளிலெல்லாம் ஒலிக்கும் எண்ணங்களையும் கருத்துக்களையும் பிரதிபலிப்பவன் அவன்.

'ஏழைத் தெற்கத்தியான்களாகிய நமக்கு பால்கன் நாட்டு ஸ்லாவ் இனத்தினர்தான் நெருங்கிய சொந்தக்காரர் கள்; நமது நேசதேச சகாக்கள் என்று சொல்லி, நம் நட் புக்குப் பதிலாக ஆப்பிரிக்க மண்ணை அள்ளி நமக்குத் தாரா ளமாகக் கொடுத்தார்களே அந்தப் புண்ணியவான்களை விட அவர்கள் நமக்கு வேண்டியவர்கள் தான்' என்று சொன்னார் கள்.

தெற்கத்திய எளிய மக்கள் இதையே திருப்பத் திரும் பப் பேசிக் கொண்டார்கள். பெப்பி எல்லாவற்றையும் கேட்பதுண்டு; எதையும் மறப்பதில்லை.

கத்தரிக்கோல் போன்ற கால்களை இழுத்து இழுத்துப் போட்டுக் கொண்டு தள்ளாடி நடக்கிறான் இங்கிலீஷ்காரன் ஒருவன். அவன் முன்னால் போய் பெப்பி ஒப்பாரியையோ அழுகுணிச் சிந்துவையோ ஓலமிடுவது போல் இழுப்பான்:

'இறந் தொழிந்தான் என் நண்பன் ;
இருக்கின்ற என் மனைவி
ஏனோ அழுகின்றாள் ;
எனக்கேதும் புரியவில்லையே !'

பின்னால் ஊர்ந்து வரும் பெப்பியின் தோழர்கள் சிரிப்புத் தாங்க மாட்டாமல் அவதியுறுவர். அந்நிய நாட்டான் குவிந்த கண்களைத் திருப்பி அமைதியாகப் பார்வை எறியும் போதெல்லாம் அவர்கள் புதர்களிலோ சுவரின் பின்னோ பதுங்கிவிடச் சுண்டெலிகள் மாதிரி விழுந்தடித்து ஓடுவர்.

பெப்பியைப் பற்றி இத்தகைய உல்லாசக் கதைகள் எத்தனையோ சொல்லலாம்.

ஒருநாள் ஒரு அம்மாள் தனது தோட்டத்தில் பழுத்த ஆப்பிள் பழங்களைக் கூடை யொன்றில் வைத்து, தனக்குத் தெரிந்த ஒருவரிடம் கொண்டு போய்க் கொடுக்கும்படி அவனை அனுப்பினாள்.

'உனக்கு ஒரு ஸால்டோ* தருவேன். உனக்கே உனக்கு, இஷ்டம் போல் செலவு செய்ய' என்றும் சொன்னாள்.

உடனே கூடையை எடுத்தான் பெப்பி. தலையில் பதிவாக வைத்துக்கொண்டு கிளம்பிவிட்டான். ஸால்டோ பெறுவதற்கு அவன் சாயங்காலத்திற்கு முந்தி வந்து சேரவில்லை.

'ஏது, உனக்கு அவசரமில்லை போலிருக்கு' என்றாள் அந்த அம்மாள்.

பெப்பி பெருமூச்செறிந்து சொன்னான்: 'ஆஹ், என் னருமை ஸின்யாரா!* நான் ரொம்பக் களைத்துப் போனேன்.'

---

* இத்தாலிய நாணயங்களில் ஒன்று.

* பெண்ணை கௌரவிக்கும் இத்தாலியச் சொல். மிஸஸ், ஸ்ரீமதி என்பது போல இதுவும். 'ஸின்யார்' என்பது ஆண்பால்.

'பத்துக்கு அதிகமாகவே இருந்ததனுல்தான் இப்படி' என்றும் சொன்னுன்.

'ஆமா. பத்துக்கு அதிகமாக என்கிருயே. கூடை நிறைய அல்லவா இருந்தது!'

'ஆப்பிள்கள் அல்ல, அம்மா! பையன்கள்.'

'அப்போ ஆப்பிள்கள் என்ன ஆச்சு?'

'முதலில் பையன்கள்தான், வின்யாரா. மிக்கேல், கியாவனி ...'

அவளுக்குக் கோபம் வந்து விட்டது. அவள் பெப்பி யைத் தோள்களைப் பற்றி உலுக்கினுள். 'உள்ளதைச் சொல்லு. நீ ஆப்பிள் பழங்களைக் கொண்டு போய்க் கொடுத் தாயா இல்லையா?' என்று கத்தினுள்.

'சதுக்கம் வரை உள்ள தூரம் பூராவும் கூடையைச் சுமந்து கொண்டே போய்ச் சேர்ந்தேன். கேள் வின்யாரா. நான் எவ்வளவு நல்ல பையனுக நடந்திருக்கிறேன் தெரி யுமா. ஆரம்பத்தில் நான் அந்தப் பயல்களின் கிண்டல் களுக்கு செவிசாய்க்கவே யில்லை. போகட்டும், என்னை ஒரு கழுதையுடன் ஒப்பிட்டு அவர்கள் பேசட்டும். வின்யாரா விடம் எனக்குள்ள மதிப்பைக் காப்பாற்ற நான் எதையும் சகித்துக் கொள்வேன். இப்படி எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். எல்லாம் உனக்காகத்தான், வின்யாரா! ஆனல் அந்தப் பயல்கள் எங்க அம்மாவைப் பற்றி பேச் செடுத்ததும், பொறுத்தது போதும் என்று தீர்மானித் தேன். கூடையைக் கீழே இறக்கி வைத்தேன். அப்புறம் ஆப்பிள் பழங்களினுலே அந்தச் சைத்தான் குஞ்சுகளை என்னமா ஓடஓட அடித்தேன்கிறதை நீ கண்ணுலே பார்த் திருக்கணும் அம்மா. அந்த தமாஷை நீ ரசித்திருப்பாய்!'

'என் பழங்களைத் திருடி விட்டார்களே' என்று அல றினுள் அவள்.

சோகப் பெருமூச்சு உயிர்த்தான் பெப்பி. 'இல்லவே இல்லை. பயல்கள் மீது படாமல் தவறிய ஆப்பிள் எல்

லாம் சுவர் மீது மோதிக் கூழாகிவிட்டது. ஆனால் அந்தச் சண்டைக்காரப் பயல்களைத் தோற்கடித்து, அப்புறம் சமாதானமாகி விட்டதும், பாக்கியிருந்த பழங்களை நாங்கள் தின்று தீர்த்தோம்...'

பெப்பியின் சிறிய மொட்டைத் தலைமேலே வெள்ளம் போல் பாய்ந்த வசைமாரியைக்கொட்டினாள் அந்த அம்மாள். அவனோ மிகவும் பணிவாக அக்கறையோடு கவனித்து நின்றான். 'ஆணிமுத்துப் போலே' ஒருசொல் வந்து உதிரும் போது மிருதியும் ரசித்து நாக்கைக் கொட்டி வியந்து போனான் அவன். 'ஆகா, இதுவன்றோ அழகு! என்ன சொல்லாட்சி!' என்று தான்.

அவளது கோபம் முழுவதும் காலியாகி அவள் அடங்கியதும் அவன் உற்சாகமாகக் கத்தினான்:

'நீ கொடுத்த அற்புதமான ஆப்பிள்களை வீசி அந்த உதவாக்கரைப் பயல்களின் சாக்கடை மண்டைகளைக் குழைய வைத்த நேர்த்தியை நீ பார்த்திருந்தால், இப்படிப் பேசியிருக்க மாட்டாய். நீ மட்டும் அதைப் பார்த்திருந்தியோ, எனக்கு நீ ஒரு ஸால்டோ என்ன, ரெண்டு ஸால்டோக்களே தந்திருப்பாய்.'

வெற்றி பெற்றவனின் அடக்கமான கவ குணத்தைப் புரிந்து கொள்ள முடியாத அந்த அப்பாவி அம்மாள் முஷ்டியை ஓங்கி ஆட்டி பயமுறுத்தி விட்டுப் போனாள்.

பெப்பியின் சகோதரி அவனை விட வயது அதிகமானவள் தான். ஆனால் அவனை விட அதிகச் சமர்த்து என்று சொல்லமுடியாது. பணம் படைத்த அமெரிக்கன் ஒருவன் வீட்டிலே வேலை பார்க்கப் போய்ச் சேர்ந்தாள் அவள். அதிலிருந்து அவள் தோற்றமே மாறிவிட்டது. அழகும் அலங்காரமும் சேர்ந்தன. அவளது கன்னங்கள் ரோஜாச் சிவப்பு ஏற்றன. அவளே ஆகஸ்டு மாதத்துப் பீயர் மாதிரி மலர்ந்து கனிவுறத் தொடங்கினாள்.

'நிஜமா நீ நிதம் சாப்பிடுகிறாயா அக்கா?' என்று ஒரு நாள் அவளிடம் கேட்டான் அவன்.

'இரண்டு வேளை, நினைத்தால் மூன்று தரம் கூடச் சாப்பிடுகிறேனே' என்று பெருமைப்பட்டாள் அவள்.

'உன் பல்லு தேய்ந்து போகாமல் பார்த்துக்கொள்' என்று புத்தி சொன்னான் பெப்பி. பிறகு அவன் கேட்டான்: 'உங்க முதலாளி ரொம்பப் பெரிய பணக்காரரோ?'

'ஓ, ஆமா. ராஜாவை விட அவர் பெரிய பணக்காரர்னு தான் நினைக்கிறேன்.'

'இது பேத்தல்தான். அவருக்கு எத்தனை கால்சட்டைகள் இருக்கும், சொல்லு.'

'சிரமமான காரியம்தான்.'

'பத்து இருக்குமா?'

'ஜாஸ்தியே யிருக்கலாம்.'

'சரி. போயி எனக்காக ஒரு டிரௌசர் எடுத்து வா. கால் பக்கம் ரொம்ப நீளமாக யிருப்பது வேண்டாம். எப்படியானாலும் குளிருக்கு அடக்கமாக இருக்கக் கூடியதாகப் பாரு' என்றான் பெப்பி.

'எதற்காகவாம்?'

'உம். என்னிட மிருப்பதைத் தான் பாரேன்.'

அங்கே பார்ப்பதற்குப் பிரமாதமாக எதுவுமில்லை. ஏனெனில் பெப்பியின் கால்சட்டை எனத் தொங்கியது மிகவும் அல்பமே.

'வாஸ்தவம். உனக்கு வேறு ஆடைகள் தேவை தான்' என்று ஆமோதித்தாள் அக்காள். 'ஆனால் நாம் அவர்கள் வீட்டில் திருடிவிட்டோம் என்று நினைக்க மாட்டார்களா?'

'மற்றவர்களும் நமமைப் போல் முட்டாளகளாக இருப்பார்கள் என்று நினைக்காதே. நிறைய வைத்திருப்பவர்களிட மிருந்து ஏதோ கொஞ்சம் எடுத்துக் கொண்டால் அது திருட்டே அல்ல; பங்கிட்டுக் கொள்வது. அவ்வளவு தான்.'

'நீ பேசுவது மடத்தனம்' என்றாள் அக்காள். ஆனால் அவள் மனக்கோளாறுகளை யெல்லாம் பெப்பி

போக்கடித்து விட்டான். அவள் அழுகிய மங்கிய சாம்பல் வர்ணக் கால்சட்டை ஒன்றை எடுத்து வந்தாள். அது பெப்பிக்கு ரொம்பப் பெரிதுதான். என்றாலும் சங்கடத்தைத் தவிர்ப்பது எப்படி என்பதற்கு அவன் அந்நேரத்திலேயே வழி கண்டுவிட்டான்.

'கத்தியை எடு' என்றான்.

இரண்டு பேரும் சேர்ந்து, அமெரிக்கனின் கால் சட்டையை சின்னப் பையனுக்குத் தகுந்த வசதியான உடுப்பாக மாற்றி விட்டார்கள். கொஞ்சம் தொளதொளப்பான சாக்கு மாதிரி: ஆனால் தொந்தரவு கொடுக்காது; ஒரு கயிறின் உதவியால் அதைத் தோளில் தொங்க விட்டு, கயிறைக் கழுத்தைச் சுற்றிக் கட்டி முடிபோட்டு விடலாம்; கால் சட்டையின் பைகள் பையனின் கைகள் தொங்குவதற்குத் துணைபுரியும் பகுதியாகும் - இப்படி ஒரு பொருள் தான் அவர்களது உழைப்பின் விளைவு.

அவர்கள் உழைப்பின் நடுவிலே வீட்டு எஜமானியம்மா குறுக்கிடாமலிருந்திருப்பின், அதைவிடச் சிறந்த சௌகரியமான உடுப்பு ஒன்றை அவர்கள் உருவாக்கியிருப்பார்கள். அடுப்பங்கரைப் பக்கம் வந்தவள் 'பல பாஷைகளிலுமுள்ள மிக ஆபாச வார்த்தைகள் பலவற்றையும் கொட்ட ஆரம்பித்து விட்டாள். அவற்றைக் கூட, பொதுவாக எல்லா அமெரிக்கர்களும் செய்வது போலவே, மகா மோசமாக உச்சரித்தாள்.

சொற் பெருக்கைத் தடுக்கும் திறன் பெப்பியிடமில்லை. அவன் முகம் சுளித்தான்; தன் மார்பைக் கையால் பற்றினன்; செய்யும் வகையறியாமல் தலையைத் தடவினன்; கனத்த பெருமூச்செறிந்தான். ஆனல் அவளோ தன் புருஷன் அந்த இடத்திற்கு வருகிற வரையில் ஓயவேயில்லை.

'என்ன விஷயம்?' என்று விசாரித்தான் அவன்.

உடனே பெப்பி பேசத் தொடங்கினன்: 'ஸின்யார், உங்கள் ஸின்யாரா கிளப்பியுள்ள குழப்பத்தைக் கண்டு

நான் ஆச்சர்யப்படுகிறேன். உங்களுக்காக நான் சிறிது துயரப்படுகிறேன் என்றுகூடச் சொல்லலாம். எனக்குப் புரிகிற வரையில், இந்த அம்மாள் நாங்கள் டிரௌசரைப் பாழ்படுத்தி விட்டதாய் எண்ணுவதாகத் தெரிகிறது. உங்கள் கையிருப்பான கடைசிக் கால்சட்டையை நான் எடுத்துக் கொண்டது போலவும், உங்களுக்காக நீங்கள் வேறொரு சட்டை வாங்க இயலாதவர்கள் போலவும் இந்த அம்மாள் எண்ணுவதாகத் தோன்றுகிறது...'

இதுவரை அமைதியாகக் கேட்டு நின்ற அமெரிக்கன் குறிப்பிட்டான்: 'சரி தம்பி, போலீஸ்காரனைக் கூப்பிட வேண்டியது தான் என்றே நான் நினைக்கிறேன்.'

'நிஜமாகவா? எதற்காகவோ?' என்று வியப்புடன் வினவினான் பெப்பி.

'உன்னை ஜெயிலுக்கு அழைத்துப் போக...

பெப்பிக்கு அளவற்ற வேதனை ஏற்பட்டது. உண்மையில் அவன் அழத் தயாராகி விட்டான். எனினும் கண்ணீரை அடக்கிக் கொண்டு, கண்யம் குன்றாத முறையிலே பேசினான்.

'ஸின்யார், மக்களை ஜெயிலுக்கு அனுப்புவது உமக்கு ஆனந்தம் அளிக்கிறதென்றால், அது உமது சொந்த விஷயம். என்னிடம் பல கால்சட்டைகளிருந்து, உம்மிடம் ஒன்றுகூட இல்லாதிருக்குமானால், நான் உம்மைப் போல் நடந்து கொள்ள மாட்டேன். உமக்கு இரண்டு கால் சட்டைகள் கொடுத்து விடுவேன். ஒருவேளை மூன்று கூடக் கொடுத்தாலும் கொடுக்கலாம். ஒரே சமயத்தில் ஒருவன் மூன்று கால்சட்டைகளை அணிந்து கொள்ள முடியாது என்பதும் உண்மை தான். முக்கியமாக கோடை காலத்தில்...'

அமெரிக்கனுக்குச் சிரிப்பு பொங்கி வந்தது. பணக்காரர்கள் கூடச் சில சமயங்களில் தமாஷ்களை உணர்ந்து விடுகிறார்கள். ஆகவே அவன் பெப்பிக்கு சாக்கலெட்

விருந்து அளித்தான். ஒரு பிராங்க் நாணயமும் கொடுத்தான்.

பெப்பி அக் காசைக் கடித்துப் பார்த்தான். 'வந்தனம் ஐயா! இது நல்ல நாணயம் என்றுதான் தோன்றுகிறது; இல்லையா!' என்று கூறித் தன் நன்றியை அறிவித்துக் கொண்டான்.

பெப்பியின் உயர்வை அறிய வேண்டுமானால், அவன் தனியாக எங்காவது பாறைகளிடையே நின்று கருங்கல்லின் இருண்ட கதையைப் படிப்பதுபோல் பாறைப் பிளவுகளையே கூர்ந்து கவனித்து யோசனையில் ஆழ்ந்து விடுகிற போது பார்க்கவேண்டும். அவ் வேளைகளில், ஒளி நிறைந்த அவனது கண்கள் வியப்பினால் விரிந்து மின்னும்; மென் கரங்கள் முதுகுக்குப் பின்னால் கட்டுண்டிருக்கும்; சற்றே சாய்ந்த தலை இளங் காற்றில் ஆடி அசையும் பெரிய புஷ்பம் போல அசைவுறும். ஏதேனும் ஓர் இன்னிசைப் பண்ணை முனங்கிக் கொண்டே நிற்பான் அவன் எப்பொழுது பார்த்தாலும் அவன் பாடிக் கொண்டுதானிருப்பான்.

பூக்களைக் கவனித்து நிற்கும் பொழுது, சுவர்கள் மீது மண்டிக் கிடக்கும் கொடிகள் பூத்துக் குலுங்குகிற பர்ப்பிள் நிறப் புஷ்பங்களைப் பார்த்து மகிழும் போதும், அவனைக் கவனிப்பது நல்லதுதான். கடற் காற்றின் மென் மூச்சால் துடிப்புறும் மலர்களின் பட்டு இதழ்களின் இன் துடிப்பைக் கூர்ந்து கவனிக்க முயல்கிறவன் மாதிரி, முறுக்கேறிய வீணைத் தந்திபோல், நிற்பான் அவன்.

கவனித்து நிற்கும் பேதே 'ஃபியாரினோ...ஃபியாரினோ...' என்று பாடிக்கொண்டுமிருப்பான்.

வெகு தொலைவிலிருந்து கடலின் ஆழ்ந்த பெருமூச்சு பொங்கி வரும், பெரிய தம்புரா எதுவோ ஒன்றின் நாதப் பெருக்கு போல. வன்ன மலர்களினூடே ஒன்றை ஒன்று துரத்தி விளையாடும் வண்ணப் பூச்சிகள். பெப்பி தலை

நிமிர்ந்து, சூரிய ஒளி காரணமாகக் கண்களை மூடிமூடி முழித்தபடி அவற்றையே கவனிப்பான். பிரிந்த உதடுகளில் தவழும் புன்னகையிலே பொறுமையும் வருத்தமும் கலந்து தானிருக்கும். எனினும் மண்ணுலகத்து உயர்ந்த சிருஷ்டி சிதறும் தாராளச் சிரிப்பு அது.

மரகதப் பசும் பல்லி ஒன்றைப் பயமுறுத்தி ஓட்டுவதற் காகக் கைகளைக் கொட்டிக் கொண்டே 'ஓஹி!' என்று கத்துவான் அவன்.

கடல் கண்ணாடி மாதிரிக் களங்க மற்றிருக்கும்போது, பாறைகள் மீது அலைகளின் வெண்ணுரை படியாதிருக்கும் போது, தெளிந்த நீரிடையே தன் ஒளிக்கண் வீசி ஒரு கல் மீது அமர்ந்திருப்பான் பெப்பி. நீரினுள் கிடக்கும் செங் கிண்ணங்கள் போன்ற பாசிகளிடையே நீந்திக் களிக்கும் மீன்களை, அங்குமிங்கும் ஆடிஓடி மகிழும் கடற்பூச்சிகளை, பக்கவாட்டிலே நகர்ந்தசையும் நண்டுகளை யெல்லாம் பார்த் திருப்பான். கொலுவிருக்கும் அமைதியினூடே; நீல நெடுங்கடல் மேலே, எங்கும் தவழ்ந்து ஒலிக்கும் அச் சிறு வனின் தெள்ளிய தீங்குரல்.

'கடலே, ஓ கடலே...'

பெப்பியைப் பார்த்துப் பெரிய மனிதர்கள் வெறுப் போடு தலையாட்டுவார்கள். 'இந்தப் பயல் அடங்காப் பிடாரியாகத் தான் வளருவான்' என்பார்கள்.

ஆனால், அதிக தீர்க்க தரிசனமுடைய நல்ல மனிதர் கள் சிலரது அபிப்பிராயம் வேறு விதமாக யிருக்கும். 'பெப்பி தான் நமது வருங்காலக் கவிஞர்' என்பார்கள்.

மரச்சாமான்கள் செய்யும் பாஸ்காலினோ இருக் கிறாரே, வெள்ளியில் வார்த்து எடுத்தது போன்ற தலையும் புராதன ரோமன் நாணயத்திலே அச்சிட்டிருந்தது போன்ற முகமும் பெற்ற கிழவர், - எல்லோராலும் போற்றப்படும்

அந்தப் புத்திசாலி பாஸ்காலினே தனக்கெனத் தனி அபிப் பிராயம் கொண்டிருந்தார்.

'நமது குழந்தைகள் நம்மைவிட எவ்வளவோ மேலானவர்களாகத் தானிருப்பார்கள். அவர்கள் வாழ்க் கையும் எத்தனையோ மடங்கு சிறந்ததாகத்தானிருக்கும்,'

பெரும்பலர் அவர் பேச்சை நம்புவதுமுண்டு.

★

# மனிதனுக்கே வெற்றி

நிரந்தரமாய் பனி மூடியிருக்கும் உயர்ந்த மலைகளை வரம்புகளாகக் கொண்டு அமைந்திருந்தது சாந்திமய நீல ஏரி. நந்தவனங்களின் கரிய இலைத் தொகுப்புகள் நீரோரம் வரை வளம் நிறைந்து அலை பாய்ந்து கிடந்தன. சர்க்கரைக் கட்டிகளால் அமைக்கப் பெற்றவை போல் தோன்றும் வெள்ளைநிற வீடுகள் நீரினுள் எட்டிப் பார்த்தபடி நின்றன. குழந்தையின் இனிய துயில் போல் குடியிருந்தது அமைதி.

காலை வேளை. மலர்களின் நறுமணம் மலைப் புறங்களிலிருந்து மிதந்து வந்தது. அப்பொழுதுதான் சூரியன் உதயமாகியிருந்தது. மரங்களின் இலைகள், புல் வரிசைகள் மீதெல்லாம் பனித்துளிகள் இன்னும் பளபளத்துக் கொண்டிருந்தன. மலைகளின் மோன நெளிவுகளிடையே எறிந்த சாம்பல் வர்ண ரிப்பன் போலக் கிடந்தது ரோடு. கற்கள் பரவிய பாதைதான்; ஆயினும் தொட்டால் பட்டுப் போல் மென்மையாகயிருக்குமோ என்ற மயக்கம் விளைவிக்கும் தோற்றம் பெற்றிருந்தது.

கரடு முரடான கருங்கற் குவியல் ஒன்றின் அருகிலே, கருவண்டு போல் கறுத்திருந்த தொழிலாளி ஒருவன் உட்கார்ந்திருந்தான். ஆண்மையையும் அன்பையும் சித்தரித்தது அவன் முகம். மார்பிலே ஒரு மெடல் அணிந்திருந்தான் அவன்.

உழைப்பினால் உரமேறிய கைகளைத் தன் முழங்கால்களில் ஊன்றி ஒய்ந்திருந்த அவன் தலைநிமிர்ந்து நோக்கினான். செஸ்நட் மரத்தடியில் நின்ற வழிப்போக்கனின் முகத்தையே கவனித்தான்.

"ஸிம்ப்ளான் டன்னல் வேலையில் எனது உழைப்பைப் பாராட்டி அளிக்கப்பட்ட மெடல் இது" என்று சொன்னான்.

உடனேயே, தலையைத் தாழ்த்தி, மார்பில் மினிர்ந்த உலோகத் தகட்டைப் பார்த்துப் புன்னகை புரிந்தான் அவன்.

"ஆமாம். எலும்போடு எலும்பாய் ஊறிப் போகிற வரை எல்லா வேலையுமே கஷ்டமானதுதான். பிறகு நாம் அதைக் காதலிக்கக் கற்றுக் கொள்கிறோம். அப்புறம் அது நமக்கு உள்ளக் கிளர்ச்சி உண்டாக்குகிறது. கஷ்டமானதா யிருப்பதில்லை. ஆனால் அது லேசான விஷயமல்ல."

சூரியனை நோக்கிச் சிரித்துக் கொண்டே மெதுவாகத் தலையசைத்தான் அவன். திடீரென்று சுறுசுறுப்படைந்து அவன் தன் கையை வீசினான். அவனது கரிய கண்கள் மினுமினுத்தன.

"சிலசமயம் அது கொஞ்சம் பயங்கரமானதாகத்தா னிருந்தது. மண்ணுக்குக்கூட ஏதோ ஒருவகை உணர்ச்சி இருக்கத்தானே வேண்டும்; இல்லையா, நீ என்ன நினைக் கிறாய்? ஆழக் குடைந்து தோண்டி மலைப்பரப்பிலே பெரிய காயம் விளைவித்தபோது, அங்கே உள்ளே யிருந்த பூமி ஆங்காரத்தோடு எங்களை எதிர்த்தது. அதன் மூச்சு சூடுற் றிருந்தது. எங்கள் இதயங்கள் குவிந்தன; தலைகள் கனத் தன; எலும்புகள் வலித்தன. இதை எத்தனையோ பேர் அனுபவித்து விட்டார்கள். பிறகு அது எங்கள் மீது கற் களை வீசி எறிந்தது; கொதிநீரால் எங்களைக் குளிப்பாட்டி யது. மிகவும் கோரமானது அது. சில சமயம் அங்கு வெளிச்சம் பட்டுத் தெறிக்கையில், அந்த நீர் சிவப்பாகத் தோன்றும். அப்பொழுதெல்லாம், நாம் பூமியைக் காயப் படுத்தி விட்டோம், அது தன் ரத்தத்தினால் நம்மை மூழ் கடித்துப் பொசுக்கி விடும் என்று என் தந்தை சொல்வார்! நிச்சயமாக அது வெறும் கற்பனைதான். ஆனாலும், பூமிப் பரப்பினுள்ளே ஆழ்ந்த இடத்தில், மூச்சு முட்ட வைக்கும் அந்தகாரத்திலே, துயரத் துளிகள்போல் தண்ணீர் சொட் டிக் கொண்டிருக்கையில், இரும்பு கல்லைத் துருவித் துளைக்

கும் வேளையில், இந்த விதமான பேச்சைக் கேட்கும்போது எதுவும் சாத்தியம் என்றே தோன்றும். அங்கு எல்லாமே விசித்திரமாகத்தானிருந்தன, ஸின்யார். மேக மண்டலத்தை தொட்டு நின்ற அந்த மலைபருகே - எதன் குடல்களை நாங்கள் குடைந்து பொடியாக்கிக் கொண்டிருந்தோமோ அந்த மலையின் பக்கத்தில் - மனிதர்களாகிய நாங்கள் அல்பமாய் காட்சியளித்தோம்...... நான் என்ன கருத்தில் சொல்கிறேன் என்பதை உணர நீர் அதைக் கண்ணால் காண வேண்டும் மலைப்பரப்பிலே நாங்கள் சின்ன மனிதர்கள் தோண்டியிருக்கும் பேழ்வாயை நீர் அவசியம் பார்த்தாக வேண்டும். உதய வேளையில் நாங்கள் அதன் வழியே உள்ளே நுழையும்போது, மண்ணின் குடலுக்குள் நாங்கள் துருவிச் செல்கையில் சூரியன் எங்கள் பின் துயர நோக்கெறிந்து நிற்கும். இயந்திரங்களையும், மலையின் சோக மூஞ்சியையும் நீர் பார்த்திருக்க வேண்டும்; உள்ளே இருளாழத்தில் எழும் உறுமலையும், பைத்தியக்காரனின் சிரிப்பு போல் எதிரொலிக்கும் வெடியோசைகளையும் கேட்க வேண்டும்.”

அவன் தன் கைகளை ஆராய்ந்தான்; நீல நிற மேலங்கி மீது கிடந்த உலோகத் தகட்டைத் தொட்டான்; லேசாகப் பெருமூச்செறிந்தான்.

பிறகு பெருமையோடு பேசினான்: “மனிதனுக்குத் தெரியும் எப்படி வேலை செய்ய வேண்டுமென்று. ஆம் ஐயா! மனிதன் சிறிய பிறவியாக இருந்தாலும், உழைப்பது என்று கிளம்பி விட்டானானால், வெல்ல முடியாத சக்தியாகப் பரிணமிக்க முடியும். என் வார்த்தைகளை நம்பும்; பலவீனமான மனிதன் தான் நினைக்கிற எதையும் சாதித்து முடிக்கக்கூடிய காலம் வரப் போகிறது. என் தந்தை முதலில் அதில் நம்பிக்கை கொள்ளவில்லை.

‘ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு மலையைக் குடைந்து கொண்டு போவது, மலைகளாகிய சுவர்களை

எழுப்பி நாடுகளைப் பிரித்து வைத்த கடவுளை எதிர்த்துச் செயல் புரிவதாகும். தேவமாதா நம்மைக் கைவிட்டு விடு வாள்' என்று அவர் சொல்வது வழக்கம். அவர் எண்ணம் தவறானது. தன்னை நேசிக்கும் மனிதர்களை தேவமாதா ஒருபோதும் புறக்கணிப்பதில்லை, போகப் போக எனது தந்தையும், நான் சொன்னேனே அது மாதிரியே நினைக்கத் தொடங்கினார். ஏனெனில் தான் மலையைப் பார்க்கிலும் பெரியவர், பலம் பொருந்தியவர் என அவர் உணர்ந்து விட் டார். என்றாலும், விசேஷ நாட்களில் மேஜை முன் அமர்ந்து, ஒயின் பாட்டிலை முன்னால் வைத்துக் கொண்டு, எனக்கும் மற்றவர்களுக்கும் அவர் போதனை புரிந்த கால மும் உண்டு.

'கடவுளின் புதல்வர்களே!' அவருக்குப் பிடித்த பதங்களில் இதுவுமொன்று. ஆண்டவனுக்குப் பயந்து வாழ்ந்த நல்ல மனிதர் அவர். ஆகவே அவர் சொல்வார்: 'கடவுளின் புதல்வர்களே! இந்த வகையில் நீங்கள் மண் ணோடு மல்லாடுவது கூடாது. தனக்கேற்படும் காயங்களுக் காக அவள் பழிவாங்கி விடுவாள். முடிவில் அவள் வெல்ல முடியாதவளாகவே யிருப்பாள். நீங்களே பார்க்கப் போகி றீர்கள். மலையின் நெஞ்சாழம் வரை நாம் நேரடியாக முன் னேறிப் போவோம். அந்த இடத்தைத் தொட்டவுடன் நாம் நெருப்பிலே தூக்கி எறியப்படுவோம். பூமியின் இத யமே கொடிய நெருப்புத்தான். எல்லோரும் இதை அறி வர். இயற்கையின் பிரசவத் துடிப்புகளுக்கு ஒத்தாசை புரியும் விதத்தில் நிலத்தை உழுவதற்காகத்தான் மனிதன் படைக்கப்பட்டான். அவள் முகத்தையோ உருவத்தையோ பாழ்படுத்த நாம் துணிவது தப்பு. பாரேன், மலையில் உள்ளே போகப் போகக் காற்று அதிக உஷ்ணமாகிறது. நமக்கு மூச்சு விடுவதே சிரமமாகத் தோன்றுகிறது...''

மீசையை விரல்களால் முறுக்கிக் கொண்டே மெது வாகச் சிரித்தான் அந்த மனிதன்.

"இப்படி நினைத்தது அவர் ஒருவர் மாத்திரமல்ல, உண்மையில் அவ்விதம் தானிருந்தது. மலைக் குகைக்குள் போகப் போக சூடு அதிகரித்துக் கொண்டிருந்தது. எங்களில் அநேகர் சிக்கில் விழுந்து செத்தும் போனார்கள். சூடான நீரூற்றுக்கள் முன்னைவிடப் பலம் மிகுந்த ஓடைகளாகப் பொங்கிப் பாய்ந்தன. மண்கட்டிகள் பெயர்ந்து விழுந்தன. லுங்கானோப் பிரதேசத்திலிருந்து வந்த இரண்டு பேருக்குப் பைத்தியமே பிடித்து விட்டது. இரவு நேரங்களில் விடுதியில் தங்கி யிருக்கும்போது, பலர் சித்தப் பிரமையோடு புலம்பி அலறியடித்துக் கொண்டு படுக்கையி லிருந்து குதித்தெழுவார்கள்.........

'நான் சொன்னது சரியா யிருக்கிறதா?' என்று கண்களில் பயம் மிதக்க முனங்குவார் என் தந்தை. அவரது இருமல் மிக மோசமான நிலையை அடைந்தது. 'நான் என்ன சொன்னேன்? இயற்கையை நாம் தோற்கடிக்க முடியாது' என்று சொல்லுவார்.

இறுதியாக என் தந்தை மீளமுடியாத படுக்கையில் விழுந்து விட்டார். அவர், என் அப்பா, வலிவுள்ள பெரிய மனிதர்தான். அவர் பிடிவாதத்தோடு, முணுமுணுக்காமல், மூன்று வாரங்களுக்கு அதிகமாகவே போராடினார், தனது உண்மை மதிப்பை உணர்ந்த ஒரு மனிதனைப்போல.

ஒருநாளிரவு அவர் என்னிடம் சொன்னார்: 'பாவ்லோ, என் வேலை முடிந்துவிட்டது. உன்னை நன்றாகக் கவனித்துக் கொள். உடனே வீடு திரும்பு. தேவமாதா உனக்கு அருள் புரியட்டும்!' பிறகு நெடு நேரம் மௌனமாக யிருந்தார்; கண்களை மூடிக்கொண்டு கனத்த மூச்சு உயிர்த்தபடி கிடந்தார்."

அந்த மனிதன் எழுந்து நின்றான்; மலைகளின் மேல் பார்வை எறிந்தான். நரம்பு முடிச்சுகளில் பல சுடக்குப் போடும் தன்மையில் தன் உடலை நீட்டி நெளித்து நின்றான்.

"அப்புறம் என் கையைப் பற்றி என்னைத் தன்னருகிலே இழுத்துக் கொண்டு அவர் சொன்னார் — கடவுளறிய உண்மை, ஸின்யார்!— 'பாவ்லோ, என் மகனே! எப்படியும் அது வெற்றியாக முடிந்துவிடும் என்று தான் நான் நினைக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா? நாமும், மறுபுற மிருந்து குடைந்து வருகிறவர்களும் மலைக்குள் சந்திப்போம். இதை நீ நம்புகிறாய், இல்லையா பாவ்லோ?' ஆம். நான் நம்பத்தான் செய்தேன். 'ரொம்ப நல்லது, என் குழந்தாய்! அதுதான் சரி. தான் செய்கிற காரியத்தில் மனிதன் நம்பிக்கை கொள்ள வேண்டும். வெற்றி பெறுவோம் என உறுதியாக நம்ப வேண்டும். தேவமாதாவின் வேண்டுதல்களுக்கு இணங்கி அவரும் நல்ல காரியங்களுக்குத் துணை புரிகிறார். மகனே, நான் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். அது நடைபெறுமானால், மனிதர்கள் மலையினுள் சந்தித்து விட்டார்களானால், நீ என் சமாதி யருகே வந்து, அப்பா, அது நிறைவேறிவிட்டது என்று சொல். நான் அதை அறிந்து கொள்வேன்' என்றார்."

அதுவும் நல்லது தான். அதனால் நான் வாக்குறுதி அளித்தேன். பின்னர் ஐந்து தினங்களுக்குப் பிறகு அவர் இறந்து போனார். சாவதற்கு இரண்டு நாட்களுக்கு முந்தி, குகையினுள் தான் வேலை செய்து கொண்டிருந்த இடத்திலேயே தன் உடலைப் புதைக்கவேண்டும் என்று அவர் என்னையும் மற்றவர்களையும் கேட்டுக் கொண்டார். அவ்விதமே செய்யும்படி எங்களைக் கெஞ்சிக் கேட்டார். எனினும், சித்தப் பிரமையால் அவர் அப்படிப் புலம்பினார் என்றுதான் நான் நினைக்கிறேன்.

நாங்களும், மறு பக்கத்திலிருந்து எங்களை நோக்கி நகர்ந்து வந்தவர்களும், என் தந்தை இறந்து பதின்மூன்று வாரங்களுக்குப் பிறகு, மலையினுள் சந்தித்து விட்டோம். அது வெற்றி விழா நாளே தான். ஓ, பூமிக்குள்ளே அந்த காரத்தினூடே மறுபுறம் நடந்த வேலைகளின் ஒலிகளைக் கேட்டபோது, மண் குடலின் மத்தியிலே எங்களைச் சந்திப்

பதற்காக முன்னேறிக் கொண்டிருந்தவர்கள் எழுப்பிய ஓசை களைக் கேட்டபோது, எங்கள் எல்லோரையும் ஒரேயடியாக அழுக்கி, சின்ன மனிதர்களான எங்களை நசுக்கிவிடக் கூடிய பூமியின் பெரும் பாரத்தின் கீழே எங்களுக்கு எப்படி யிருந் திருக்கும் என்பதை நீர் உணர முடிகிறதா, ஐயா.

அப்புறம் பல நாட்கள் நாங்கள் அந்த ஓசையைக் கேட் டோம். மந்தத் தொனியாக யிருந்து பின் கனமேறி நாளுக்கு நாள் தெளிவு ஏற்றுக் கிளம்பிய ஒலிகளைக் கேட்டோம். வெற்றி வீரர்களின் வெறி மகிழ்ச்சி எங்களைப் பற்றிக் கொண்டது. பிசாசுகள் மாதிரி, கொடிய பேய்கள் போல, உழைத்தோம் நாங்கள். சோர்வு உணர்ந்தோ மில்லை ;ஊக்க மொழிகள் வேண்டிஞே மில்லை. ஆ, ரொம்ப நன்ருக இருந் தது. இளவேனில் நாளிலே இன்ப நடம் புரிவது போலிருந் தது. அப்படித் தானிருந்ததய்யா, நான் சத்தியமாய் சொல்லுகிறேன். நாங்கள் குழந்தைகளைப் போல அன்பும் மென்மையும் பெற்று விட்டோம். பலபல நெடிய மாதங் களாக பூமிக்கடியிலே இருளினுள்ளே அகழ் எலி மாதிரித் தோண்டிக் கொண்டிருந்த இடத்திலே மற்றவர்களைச் சந் திக்க வேண்டும் என்ற ஆசை எவ்வளவு உணர்வு மிக்கது, எத்தகைய சக்தி வாய்ந்தது என்பதை நீர் அறிய முடியுமா ஞல், ஆகா !"

நிகழ்ந்ததை எண்ணியதால் எழுந்த கிளர்ச்சியினுல் அவன் முகத்தில் தனிக்களை ஏற்பட்டது. அவன் நெருங்கி வந்து, மனிதத்துவம் நிறைந்த ஆழ்ந்த கண்களால், தன் பேச் சைக் கேட்டிருந்தவனின் கண்களுள் பார்வை செலுத்தி இனிய ஆனந்தக் குரலிலே பேசினுன் :

"முடிவாக மண்ணின் கடைசி அடுக்கு உதிர்ந்து விழுந்து, டார்ச் விளக்கின் பிரகாசமான மஞ்சள் ஒளி திறந்த பகுதியை வெளிச்சப் படுத்தியதும், ஆனந்தக் கண்ணீர் வடி த்து நின்ற கரிய முகமொன்றைக் கண்டோம். அதற்குப் பின்னல் இன்னும் பல சுடர்கள் ; மேலும் பல முகங்கள் !

வெற்றிக் கோஷங்கள் இடியென அதிர்ந்தன. உல்லாசக் கூவல்கள்! ஓ, என் வாழ்விலேயே மிக ஆனந்தமான நாள் அதுதான். அதை எண்ணும்போது என் வாழ்க்கை வீணல்ல என்று நான் உணர்கிறேன். அதுதான் உழைப்பு, எனது உழைப்பு, புனிதமான உழைப்பு ஐயா அது. நான் அப்படித்தான் சொல்வேன். வெளியே சூரிய வெளிச்சத்திற்கு நாங்கள் வந்து சேர்ந்ததும், எங்களில் பலர் கீழே விழுந்து மண்ணை முத்தமிட்டோம். கண்ணீர் வடித்தோம். மோகினிக் கதை மாதிரி அற்புதமான அனுபவம் அது. ஆமாம். அடக்கியாளப்பட்ட மலையை முத்தமிட்டோம்; மண்ணை முத்தமிட்டோம். அதற்கு முன் எப்போதுமிருந்ததைவிட அன்றுதான் நான் மண்ணோடு மிக நெருங்கிய உறவு பூண்டுள்ளதை உணர்ந்தேன். வலின்யார், பெண்ணைக் காதலிப்பது போல, நான் பூமியைக் காதலித்தேன்!

சந்தேகம் வேண்டாம். நான் என் தந்தையின் சமாதிக்குப் போனேன். இறந்தவர்கள் எதையும் செவி மடுப்பதில்லை என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் நான் போனேன். நமக்காக உழைத்தவர்களின், நாம் பட்ட துன்பங்களைக் கொஞ்சம் கூடக் குறையாமல் உடனிருந்து அனுபவித்தவர்களின் இறுதி ஆசைகளைக் கௌரவிக்க வேண்டியது நமது கடமை யில்லையா?

ஆமாம். அவர் சமாதிக்குப் போய், தரையை என் காலால் உதைத்து, அவர் கட்டளை யிட்டபடியே சொன்னேன்.

'எந்தையே, அது முடிந்துவிட்டது. மனிதன் வென்று விட்டான். அது நிறைவேறி விட்டது தந்தையே!' என்றேன் நான்."

★

# கடலில் நடந்தது

ஸிக்காடப் பூச்சிகள் இரைந்து கொண்டிருந்தன. ஆலிவ் மரங்களின் அடர்ந்த இலைக் கூட்டங்களிடையே ஆயிரமாயிரம் உலோகக் கம்பிகளை முறுக்கேற்றி வைத்திருப்பது போலவும், தடித்த இலைகளைக் காற்று அசைக்கவே அவை ஆடித் துடிப்பது போலவும், இந்த இடையறா மென் ஸ்பரிசத்தினாலேயே கிறுகிறுக்கச் செய்யும் ஓசை எழுவது போலவுமிருந்தது அது. உண்மையில் அது இசையேயல்ல. எனினும் மாயக் கரங்கள் எவையோ அருவமான வீணைகள் பலவற்றைச் சுருதி கூட்டிக் கொண்டிருப்பது போன்ற பிரமையை விளைவித்தது அது; சுருதி கூட்டும் வேலை முடிந்ததும் மகத்தான தந்தி வாத்தியங்களிலிருந்து வெற்றிப் பேரொலி ஞாயிறு, வானம், கடல் அனைத்திற்குமுரிய இசையாய்ப் பிரவகிக்கும் என்று எண்ணி எதிர்நோக்கி நிற்கவும் தூண்டியது.

மரங்களின் முடிகளையெல்லாம் மலைகளிலிருந்து கடல் நோக்கி நகரும் அலைமுகடுகள் போல் காட்சி தரும்படி ஆட்டி அசைத்துச் சுழன்றது காற்று. கருங்கல் கரை மீது தாளந் தவறாது மந்த கதியிலே மோதிக் கொண்டிருந்தன அலைகள். உயிருற்ற குவியல்களாய், வாரி யிறைத்த நுரைப் பூச்சுகளாய் விளங்கியது நீலப் பெரும் பரப்பில் தங்கிட வந்த மந்தை மந்தையான பறவைகள்போல் தோற்றமளித்த நெடுங்கடல். ஒரு திக்கு நோக்கியே பாய்கின்றன அவை; பின் ஆழத்திலே பம்மி விடுகின்றன, மீண்டும் மெல்லொலி இசைத்து எவ்விப் பாய்வதற்காக; விழிப்புறும் அவற்றை ஏய்ப்புக் காட்டித் தடம் மாறச் செய்ய முயல்வன போல, மூன்று பாய்கள் விரித்த படகுகள் இரண்டு தொடுவானத் தருகே உயர்ந்தும் தாழ்ந்தும் மிதந்தன. அவைகூட சாம்

பல் வர்ணப் பறவைகளின் ஜோடி போலவே காட்சி தந்தன அரைகுறையாக மறந்துபோன பழங் கனவு போலப் பொய்த் தோற்றம் பெற்றிருந்தது அந்தக் காட்சி முழுவதும்.

சிறுசிறு கூழாங் கற்கள் படிந்த கடற்கரையிலே, பாறைகளின் நிழலில் அமர்ந்திருந்த கிழட்டுச் செம்படவன் ஒருவன் சொன்னான், 'இன்று சூரியன் அஸ்தமிப்பதற்குள் கடும் புயல் வரும்' என்று.

மணம் நிறைந்த கடற் பாசிகள், துருவேறிய நிறமும் பொன் வண்ணமும் பசிய நிறமும் பெற்றவை, அலைகளினால் கரை சேர்க்கப்பட்டு சிறு கற்கள் மீது பரந்து கிடந்தன. எரிக்கும் வெயிலில் தீய்க்கும் கற்களில் கிடந்து கடற்பாசிகள் கருகி உப்புக் காற்றிலே கெடி மிகுந்த அயடின் நாற்றத்தையும் கலக்க விட்டன. சுருளும் சிற்றலைகள் கடலோரத்திலே தொட்டுப் பிடித்து ஒடியாடின.

உலர்ந்து வாடிய சிறிய முகம், வளைந்த மூக்கு, தோலின் இருண்ட மடிப்புகளினுள் மறைந்து கிடக்கும் மிகக் கூரிய உருண்டைக் கண்கள், இவற்றுலெல்லாம் அந்தக் கிழச் செம்படவன் ஒரு பறவையை ஒத்திருந்தான். நெடு முரடாய் வதங்கிப்போன அவன் கைவிரல்கள் முழங்கால் மேல் அசைவற்றுக் கிடந்தன.

"ஐம்பது வருஷங்களுக்கு முந்தி, ஸின்யார்" என்று ஆரம்பித்தான் அக்கிழவன். அலைகளின் முணுமுணுப்பு, ஸிக்காடப் பூச்சிகளின் ஓயாத முனகல் இவற்றுடன் ஒன்றியிசையும் தொனியிலே பேசினான் அவன். "இதைப் போலவே பிரகாசமாய் பிரமாதமாகயிருந்த ஒரு நாள் என் நினைவுக்கு வருகிறது. அன்றும் எல்லாம் சிரித்துப் பாடிக் கும்மாளி யிடுவதாகவே தோன்றியது. அப்பொழுது எங்க அப்பாவுக்கு நாற்பது வயசிருக்கும். எனக்குப் பதினறு வயது. காதல் புரியும் பருவம். கருணை நிறைந்த சூரியன்

ஆட்சியில் வாழக் கொடுத்து வைத்த பதினாறு வயது இளைஞனுக்கு அது இயல்பு தானே.

'டோனி, இங்கே வா' என்று அழைத்தார் என் தந்தை. கொஞ்சம் பெஸ்லோனி பிடித்து வரப் போவோம் என்றார். பெஸ்லோனி என்பது, வலின்யார், மிக மிருதுவான ருசி மிகுந்த ஒரு வகை மீன்' இளஞ் சிவப்பு நிறச் செதில்கள் இருக்கும் அதற்கு. அடியிலே வெகு ஆழத்திலே பவளக் கொடிகளிடையே வசிப்பதனால் அதைப் பவள மீன் என்றும் சொல்வார்கள். நங்கூர மிட்டுப் படகை நிறுத்திக் கொண்டு, ரொம்பப் பாரமான தூண்டில் போட்டுத் தான் அதைப் பிடிக்க வேண்டும். அழகான மீன் அது.

ஆகவே, வெற்றிகரமான மீன் பிடிப்பு நிச்சயம் என்று எதிர்பார்த்துக் கொண்டே நாங்கள் கிளம்பினோம். என் தந்தை பலசாலி. அனுபவம் நிறைந்த மீனவர். ஆனால் இந்தப் பயணம் கிளம்பு வதற்குக் கொஞ்சநாள் முந்தித் தான் சீக்கிலே கிடந்தார். நெஞ்சிலே வலி; வாத நோயினால் விரல்கள் திருகி முறுகிப் போயின. செம்படவர்களுக்கு வரக்கூடிய வியாதிதான் இது.

இப்போ கரையிலேயிருந்து தாலாட்டுகிற மாதிரி நம்ம மேலே வீசுகிறதே, லேசாக நம்மைக் கடலை நோக்கி முன்னுக்குத் தள்ளிக் கொண்டு பாய்கிறதே, இந்தக் காற்று ரொம்பக் கபடு நிறைந்த கெட்டபய காற்று. நீர் எதிர் பாராத நேரத்திலே குபீர்னு கிளம்பிப் பாயும் அங்கே. நீர் அதுக்கு ஏதோ தீங்கு செய்துவிட்டது போல, அது வாரிச் சுருட்டிக் கொண்டு உம்ம மேலே பாயும். உமது படகைப் பறக்கடிக்கும்; சில சமயம் நீர் தண்ணீரிலே யிருக்கும்படி தோணியைத் தலைகுப்புறச் சுழற்றியடிக்கும். கண் சிமிட்டுகிறதுக்குள்ளே நடக்கிற காரியம் இது. சபிக்கவோ, கடவுள் பெயரைச் சொல்லவோ உமக்கு நேரம் கிடைக்கிறதுக்கு முன்னடி செயலற்று அந்தாடிக்கும்படியாக நீர் ரொம்பத் தொலைவிலே எறியப்பட்டு விடுவீர். இந்தக்

காற்றைவிட ஒரு கொள்ளைக்காரன் யோக்கியமானவன். என்னவானாலும் இந்த இயற்கைச் சக்திகளைவிட மனிதர்கள் எப்பொழுதுமே யோக்கியமானவர்கள் தான்.

ஆமாம். அன்றைக்கும் இதேமாதிரிக் காற்று தான் கரையி லிருந்து நாலு கிலோமீட்டருக்கு* அப்பாலே எங்களைத் தாக்கியது. மிகவும் சமீபத்தில் தான். நாங்கள் எதிர்பாராத வேளையிலே கோழை மாதிரி, கயவாளிப் பயல் போல அது எங்களை அமுக்கி விட்டது.

'கிடோ'! என்று கத்தினார் என் அப்பா. முடிச்சு முடிச்சாக யிருந்த தன் கைகளால் துடுப்பை அழுத்திப் பிடித்துக் கொண்டே கத்தினார்: 'கிடோ, அழுந்தப் பிடித்துக் கொள். சீக்கிரம், நங்கூரம் பாய்ச்சு!'

ஆனால் நங்கூரத்திற்காக நான் தட்டித் தடுமாறிக் கொண்டிருக்கையில் காற்று என் தந்தையின் கையிலிருந்த துடுப்பைப் பிடுங்கி எறிந்து, அவர் மார்பிலே பலத்த அறை ஒன்று கொடுத்து விட்டது; அவரை அப்படியே பிரக்ஞை தப்பி படகின் அடியிலே சுருண்டு விழும்படி செய்தது. எனக்கோ அவரைக் கவனிக்கக்கூட நேரமில்லை. ஒவ்வொரு விநாடியும் எங்களைத் தூக்கிக் கடலிலேபோட்டு விடுவதாகப் பயமுறுத்திக் கொண்டிருந்தது. ஆரம்பத்திலே எல்லாம் ரொம்பவும் துரிதமாக நடைபெற்றன. நான் துடுப்புகளைப் பற்றி வலிப்பதற்குள் நாங்கள் இழுப்புண்டு அலைந்தோம். எங்களைச் சுற்றிலும் வெண்துளிகள் பரவி நின்றன. அலை முடிகளிலிருந்து காற்று நுரைத் துளிகளை அள்ளித் தெளித்தது, பாதிரியார் செய்கிற மாதிரி. ஆனால் மிகவும் அதிகப் படியான வலுவுடன் செய்தது இது; எங்கள் பாபங்களைக் கழுவுவதற்காகச் செய்யப்படவுமில்லை!

என் தந்தை மயக்கம் தெளிந்து எழுந்ததும் 'நிலைமை ரொம்ப மோசமாக யிருக்கிறது, மகனே' என்றார். கரைப்

---

* ஒரு கிலோமீட்டர் என்பது கிட்டத்தட்ட அரையே அரைக்கால் மைலாகும்.

பக்கமாகப் பார்வை எறிந்தார். ‘இது இப்படியே வெகு நேரம் நீடித்திருக்கும்’ என்று சொன்னார்.

வாலிபப் பிராயத்தில் இருக்கிறபோது, ஆபத்து என்கிற உணர்ச்சியிலே உமக்கு லேசில் நம்பிக்கை விழுவதில்லை. ஆகவே, கடலிலே நாசகாரச் சைத்தான்களின் மூச்சு போலக் காற்று சுழன்று நமக்காக ஆயிரம் சவக்குழிகள் பறித்துக் கொண்டிருக்கும்போது, காசு பெறுமலே நமக்காக அதுவே சரமகவியையும் பாடிக் கொண்டிருக்கும் நெருக்கடியான வேளையிலே, உண்மையான கடலோடி ஒருவன் என்ன செய்ய வேண்டுமோ அதை யெல்லாம் நானும் செய்து படகைத் தள்ள முயன்றேன்.

‘அமைதியாக யிரு, ஙிடோ’ என்றார் என் தந்தை. தண்ணீர் தெறிக்கும்படி தலையை ஆட்டிக் கொண்டு சிரித்த வண்ணம் அவர் சொன்னார்: ‘நெருப்புக் குச்சிகளை வைத்துக் கடலை நோண்டிக் கொண்டிருப்பதனாலே என்ன பிரயோசனம்? உன் சக்தியை சேமித்து வையப்பா. இல்லையோ, வீட்டிலே யிருப்பவர்கள் உன்னை விருதாவாகத்தான் எதிர்பார்க்க நேரிடும்.’

எங்கள் சிறு படகை பச்சை நிற அலைகள் தூக்கி எறிந்தன, பயல்கள் ஒரு பந்தை உந்துவது போலே. படகின் பக்கங்களில் எகிறிக் குதித்தன; எங்கள் தலைக்கும் மேலே எவ்வின அவை. உறுமி, வெறித்தனமாய் எங்களை உலுக்கி எடுத்தன. அக்காந்த ஆழக் குழிகளுள் ஆழ்ந்தோம் ஒரு கணம். நெடிய வெண்ணலை முடிகள் மீதுயர்ந்தோம் மறு கணம். தூரத் தூரத் தொலைவிலே விரைவாய்ச் செல்லும் கரை கூட அலைபடும் எங்கள் படகுடன் ஆடி நடமிடுவது போலவே தோன்றும்.

தந்தை என்னிடம் சொன்னார்; ‘நீ திரும்பி விடலாம். ஆனால் நான் மீளப்போவதில்லை. கவனமாய் கேள். மீன் பிடிப்பதைப் பற்றியும், உழைப்பு பற்றியும் நீ தெரிந்து

கொள்ள வேண்டிய விஷயங்களைச் சொல்லித் தரு கிறேன்...'

தனித்தனி வகை மீன்களைப் பற்றி, எங்கே எப் பொழுது எப்படி அவற்றைப் பிடிக்கலாம் என்பது பற்றி யெல்லாம் தான் அறிந்திருந்தவை அனைத்தையும் எனக்குச் சொல்ல ஆரம்பித்தார் அவர்.

எங்கள் நிலைமை எவ்வளவு படுமோசமாக யிருந்தது என்பதைக் கவனித்ததும் 'இதைவிட நாம் பிரார்த்தனை செய்வது நல்லதில்லையா அப்பா?' என்றேன். சதையிலே பதித்துக் குதறிடத் துடித்த பற்களோடு நாலா திக்கிலிருந் தும் பாய்ந்து வரும் வெண்ணிற வேட்டை நாய்களிடையே சிக்கித் தவிக்கிற ஒரு ஜோடி முயல் குட்டிகள் போலிருந் தோம் நாங்கள்.

'கடவுள் தான் எல்லாவற்றையும் பார்க்கிறாரே!' என் றார் அவர். 'தரையிலே வாழ்வதற்காகத் தாம் சிருஷ்டித்து விட்ட மனிதர்கள் இப்போது கடலிலே தவியாய்த் தவித் துக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களிலே ஒருவன், பிழைக் கும் நம்பிக்கையை இழந்து விட்டதனால், தான் அறிந்து தேர்ந்த அனுபவ ஞானத்தை யெல்லாம் தன் மகனுக்கு உணர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது என்பதை யும் அவர் அறிவார். மண்ணுக்கும் மனிதருக்கும் முக்கிய மானது உழைப்பு. இது கடவுளுக்குத் தெரியும்...'

தனது தொழில் முறை பற்றித் தான் அறிந்தது அனைத்தையும் எனக்கு அறிவித்து முடிந்ததும், ஒரு மனிதன் தன் சகோதர மனிதர்களுடன் சமாதானமாக வாழ்வதற்காகக் கற்றுக்கொள்ள வேண்டியவற்றைப் பற்றி யும் அவர் சொன்னார்.

'இதுதானா எனக்குக் கற்றுத்தர வேண்டிய நேரம்? தரையிலிருக்கையில் நீங்கள் இதைச் செய்யவில்லையே' என்றேன்.

'கிலத்திலே சாவு இவ்வளவு சமீபத்தில் ஒருபோதும் நின்றதில்லையே!' என்றார்.

வெறி மிருகம் போல் ஊளையிட்டது காற்று. அலைகள் உறுமிக் கர்ஜித்தன. அதனால் தான் சொல்வது என் காதில் விழுவதற்காக அவர் கத்திப் பேச வேண்டியிருந்தது.

'உனது அண்டை அயலில் உள்ளவர்களை விட உன்னை மட்டமாகவோ உயர்வாகவோ கருதாமல் எப்பொழுதும் சகஜமாகப் பழகு. அப்புறம் எல்லாம் சரியாகவே யிருக்கும். சீமானும் செம்படவனும், பாதிரியும் படை வீரனும் ஒரே கட்டுக் கோப்பின் அங்கங்கள் தான். அந்த அமைப்பிற்கு மற்ற எல்லோரும் எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்கு நீயும் அவசியமே. அவனிடம் நல்லதை விடத் தீய பண்பே அதிகமிருக்கிறது என்று எண்ணிக் கொண்டே எந்த மனிதனையும் நெருங்க வேண்டாம். அவனிடம் நல்ல தனமே அமையக் காண்பாய் - பிறர் எப்படி எதிர் பார்க்கிறார்களோ அந்த வகையில் தான் மனிதர்கள் நடந்து கொள்கிறார்கள்.'

உண்மை. இவ்வளவையும் அவர் ஒரேயடியாகச் சொல்லிவிட வில்லை. அலையிலிருந்து அலைக்கென, இதோ ஆழத்திலே சரிந்து தாழ்ந்திட, மறுபடி உயரேஉயரே எவ்விட நாங்கள் அம்மானை ஆடப்பெற்ற போது, தெறித்த நீர்த் துளிகளிடையே பொங்கிய நுரைகளூடே மிதந்து வந்தன அவர் சொற்கள். அவர் உதிர்த்த சொற்களில் பல என் காதை வந்து அடைவதற்கு முன்பே காற்றில் அடிபட்டுப் போயின. பெரும் பகுதியை நான் புரிந்து கொள்ளவே யில்லை. பின்னே, சாவு மூஞ்சிக்கு நேரே முழித்துக் கொண்டு நிற்கையில் ஒருவன் புதிய பாடங்களை எப்படி ஐயா கற்றுக் கொள்ள முடியும்? நான் பயந்து போனேன். கடல் அவ்வளவு ஆங்காரமுற்றதை அதற்கு முன் நான் என்றுமே கண்டதில்லை; அதன் மடியிலே அவ்வித அபலையாய் நான் என்றைக்கும் இருந்ததுமில்லை. அனுபவித்த

அந்நேரத்தில்தானு, அல்லது அனுபவித்த அந்தக் காலத்தைப் பற்றிப் பின்னர் எண்ணிப் பார்த்தபோதுதானே - என் வாழ்நாளில் ஒரு பொழுது கூட மறந்துவிட முடியாத ஒற்றைத் தனி உணர்ச்சியை நான் எப்போது அனுபவித்தேன் ; அதை என்னுல் சொல்ல முடியவில்லை.

நேற்று நடந்தது போல் தெளிவாகத் தோன்றுகிறது : இதோ என் தந்தை படகின் பக்கங்களைப் பற்றிக் கொண்டு அவரிருந்த நிலையிலே, நீண்டு கிடந்த வலுவற்ற கைகளைக் காண்கிறேன். அவரது தொப்பி அலையோடு போய்விட்டது. அலைகள் இதோ வலப்புற மிருந்து, அதோ இடது பக்கத்திலிருந்து, முன்னும் பின்னுமிருந்து கிளம்பி அவர் தலையிலும் தோள்கள் மீதும் மோதின. ஒவ்வொரு முறையும் அவர் தன் தலையை ஆட்டுவார் ; பலமாகத் தும்முவார் ; என்னை நோக்கிக் கத்துவார். உடல் முழுதும் நனைந்து உட்கார்ந்திருந்த அவர் அளவிலே குறுகிப் போனது போல் காட்சி தந்தார். பயத்திலுல் பெரிதாகி யிருந்தன அவர் கண்கள். ஒருவேளை, வேதனை-காரணமாகவும் இருக்கலாம். வேதனையால் தானிருக்கும். நான் அப்படித்தான் நினைக்கிறேன்.

'கவனி. நான் பேசுவது கேட்கிறதா?' என்று கத்துவார் அவர்.

சிலசமயம் நான் பதிலளிப்பேன்.

'நான் கேட்டுக் கொண்டு தானிருக்கிறேன்.'

'நினைவில் நிறுத்து, நன்மைகள் எல்லாம் மனிதனிடமிருந்தே பிறக்கின்றன.'

'நான் ஞாபகம் வைத்துக் கொள்வேன்' என்பேன்.'

நிலத்திலிருந்த போது ஒருநாள் கூட அவர் அப்படிப் பேசியதில்லை. சதா அவர் சந்தோஷமாகவும் அன்பாகவும் நடந்து வந்தார். வேடிக்கை நினைவுடனும் நம்பிக்கை யின்மையோடும், என்றுமே நான் சின்னப் பிள்ளை என்ற எண்

ணைத்தோடுமே என்னை அவர் கவனித்து வந்தார், என்ற அரிப்பு எனக்கு உண்டு. சிலவேளை இந்தப் போக்கு எனக்கு மன வேதனை அளிக்கும். வாலிபம் எளிதில் புண்பட்டு விடும் தன்மை யுள்ளது தானே!’

அவருடைய பேச்சுகள் என் பயத்தைப் போக்கடித்தன. அதனால் தானோ என்னவோ நான் ஒவ்வொன்றையும் இவ்வளவு தெளிவாக நினைவுபடுத்த முடிகிறது.”

அந்தக் கிழச் செம்படவன் மௌனமானான். நுரை பூத்த கடலிலே நிலைத்து நின்றன அவன் கண்கள். பிறகு அவன் லேசாகச் சிரித்து, கண்ணைச் சிமிட்டி விட்டுச் சொன்னான்:

“பல வருஷங்களாக நான் மனிதர்களைக் கவனித்து வருகிறேன், ஸின்யார். அதனால் எனக்கு ஒரு விஷயம் புரிகிறது. ஞாபகப்படுத்திக் கொள்வது என்பது ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்வதேதான். நீர் எவ்வளவுக்கு நன்றாக உணர்கிறீரோ அவ்வளவுக்கு அதிகமாக நல்லனவற்றைக் காணமுடியும். இதுதான் உண்மை. நீர் என்னை நம்பலாம்.

இதோ அவருடைய அன்பு முகத்தை நான் நினைவுபடுத்த முடிகிறது. ஈரம் படிந்த முகம். விழித்து நிற்கும் பெரிய கண்கள் அன்பு கலந்த ஆழ்ந்த நோக்கை என் முகத்தில் பதித்துள்ளன, அந்தத் தினத்திலே நான் சாகப் போவதில்லை என்று நான் உணர்ந்து கொள்ளக் கூடிய தனி வகையிலே. நான் அஞ்சினேன்; ஆயினும் நான் அறிந்தேன் அன்று நான் அழிந்துபடப் போவதில்லை என்று.

தெரிந்தது தானே, முடிவில் நாங்கள் கவிழ்ந்து விட்டோம். சீறுகின்ற தண்ணீரில் கிடந்தோம் நாங்கள், பொங்கும் நுரை எங்களைக் குருடாக்கும்படி; அலைகள் எங்கள் உடல்களைப் பந்தாடும்படி; அவை எங்களைப் படகோடு மோதியடிக்கும் வகையிலே! கட்டிவைக்க முடிந்தவற்றை

யெல்லாம் நாங்கள் படகின் இருப்புச் சட்டங்களிலே பிணைத்து, கயிறுகளை எங்கள் கைகளில் பிடித்திருந்தோம். ஆகவே பிடித்திருக்க வலு உள்ளவரை நாங்கள் படகி லிருந்து விலக்கி எறியப்பட மாட்டோம். ஆனால் தண்ணீ ருக்கு மேலே தலைதூக்கி மிதப்பது கஷ்டமாக யிருந்தது. பலமுறைகள் அவரும் நானும் படகின் புறங்களிலே சாடி எறியப்பட்டோம்; அப்புறம் அலசித் தள்ளுண்டோம், எல்லாவற்றையும் விட மிக மோசமான நிலைமை தலைச் சுற் றல் ஏற்பட்டதுதான். செவிடானோம்; குருடுற்றோம். காதுகளில் நீர் நிறைந்தது. வாயோ நிறைய நிறையத் தண் ணீரை விழுங்கிக் கொண்டிருந்தது.

இந்த நிலைமை வெகு நேரம் நீடித்தது: சுமார் ஏழு மணி நேரம். பிறகு சட்டெனத் திசை மாறிய காற்று கரை நோக்கி யடித்தது. நாங்கள் கரைக்கு இழுத்துச் செல்லப் பட்டோம் வேகமாக.

'பிடித்துக் கொள்ளுங்கள்!' என்று உற்சாகமாகக் கத்தி னேன் நான்.

தந்தை பதிலுக்கு என்னவோ கத்தினார். ஒரே ஒரு வார்த்தையைத்தான் நான் கேட்டேன்.

'...மோதி...'

பாறைகளை நினைத்துச் சொல்லி யிருப்பார்; அவை இன்னும் தொலை தூரத்திற்கு அப்பால்தானே உள்ளன என்று நான் அவர் பேச்சில் நம்பிக்கை கொள்ளவில்லை. ஆனால் என்னைவிட அவருக்கு அதிகம் தெரியும். ஈவு இரக்கமற்ற தன்மையிலே மோதி அலைக்கழிக்கும் பட கோடு படகாய் நத்தைகளைப் போல் ஒட்டிக் கொண்டிருந்த நாங்கள் விறைத்துப்போன நிலையில் செயலற்றவர்களாய் ஜலமலைகளினூ டெல்லாம் இழுபட்டுச் சென்றோம். இது வும் ரொம்ப நேரம் நடைபெற்றது. எனினும் இறுதியில் கரையின் இருண்ட பார்வையில் படலாயின. அதற்குப்

பிறகு எல்லாம் மிகச் சடுதியில் நிகழ்ந்து முடிந்தன. அசைந்து ஆடி அவை எங்களை நோக்கி முன்னேறின. நீர்ப் பரப்பின் மீது குனிந்து, எங்கள் மீது இடிந்து விழுந்து நசுக்கத் தயாராக நின்றன. வெள்ளிய அலைகள் எங்கள் உடல்களை முன்னே எற்றித் தள்ளின ஒருதரம்; இரண்டா வது தடவையும்; நீண்டிருந்த பாறை ஒன்றின் அடியிலே எங்கள் தோணி கடலைக் கொட்டைபோல் நசுங்கியது; நான் தனியனாய்ப் பிய்த்தெறியப் பட்டேன்; பாறை களின் கன்னங்கரிய விலா விளிம்புகள் கூரிய கத்திகள் போல் என்முன் அச்சுறுத்தி நிற்பதைக் கண்டேன்; என் தலைக்கும் மேலாக உயர்ந்த தந்தையின் தலையைக் கண்டேன்: அது அப்போதே பேய்த்தன வளைவுகளை நோக்கி உயர்த்தப்படுதலை யும் கண்டேன்.

அடபுறம் ஒன்றிரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, முதுகு முறிந்து மண்டை சிதைந்த நிலையிலே அவரைக் கண் டெடுத்தார்கள். மூளையில் ஒரு பகுதி வெளியே அரித்துச் செல்லப்படுவதற்கு வகை செய்த அளவு பெரியதாக யிருந் தது அவர் மண்டையில் பட்டிருந்த காயம். அந்த இடத் தில் சாம்பல் நிறக் கட்டிகளாய் தோன்றிய பொருளை, அத னோடு ஒட்டிய சிவந்த ரத்த நாளங்களுடன் சேர்ந்து பளிங்குக் கல் அல்லது வெண்ணுரை ரத்தத்துடன் கலந்தது போல் தோன்றியதை, இப்பொழுது கூட நினைவில் காண முடி கிறது. பயங்கரமாய் சிதைவுற்றிருந்தது அவர் உடல்; எனினும் அவர் முகம் களங்கமற்று, அமைதியுடன் திகழ்ந் தது. அவர் கண்கள் இறுக மூடியிருந்தன.

நானா? ஆமாம். நானும் மோசமாக மோதப்பட்டிருந் தேன். என்னை அவர்கள் கரையிலே இழுத்துப் போட்ட பொழுது நான் பிரக்ஞையற்றுக் கிடந்தேன். அமால்பித் தீவுக்கு மப்பாலுள்ள நிலத்திற்கே - எங்கள் வீட்டிற்கு வெகு தூரத்திற் கப்பால் — எங்களைக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். அங்குள்ள மக்களும் மீனவர்கள் தான்.

ஆகவே இவ்வித விஷயங்கள் அவர்களுக்குத் திகைப்பூட்டு வன அல்ல. ஆனால் அவர்களை இரக்கமும் இனிமையும் நிறைந்தவர்களாக ஆக்கிவிடுகின்றன. அபாயகரமான வாழ்க்கை நடத்தும் மனிதர்கள் எப்போதும் அன்பானவர் களாகவே இருக்கிறார்கள்.

என் தந்தையைப் பற்றி உண்மையில் நான் என்ன உணர்வுகள் கொண்டிருக்கிறேன், சென்ற ஐம்பத்தோரு வருடங்களாக எனது நெஞ்சிலே நான் சுமந்து நிற்பது தான் என்ன என்பவைகளைப் பற்றி உமக்கு நன்றாகப் புரியும்படி என்னால் தெளிவுபடுத்த இயலவில்லையோ என்று தான் அஞ்சுகிறேன். அதற்கு விசேஷமான வார்த்தைகள் வேண்டும் போலும். வார்த்தைகள் போதாது, இசையே தேவையோ என்னவோ. ஆனால் நாங்கள், எளிய ஜனங் கள் மீன்களைப் போல்தான். நாங்கள் விரும்புகிற விதத்தில் எங்களால் பேச முடியாதுதான். எவரும் சொல்லால் வெளியிட இயல்வதைவிட சதா உணர்ந்து அதிகமாக அறிந்து கொள்ள முடிகிறது.

முக்கிய விஷயம் இது தான். அவர், என் தந்தை, தனது மரண வேளையிலே கூட, தான் தப்பிப் பிழைக்க முடியாது என அறிந்து அஞ்சாமலிருந்தார்; என்னை - தன் மகனை - அவர் மறக்கவில்லை; நான் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என அவர் கருதிய விஷயம் அனைத் தையும் எனக்கு அறிவிக்க வலிமை பெற்றதுடன், அதற் குரிய காலத்தையும் கணித்து விட்டார். நான் அறுபத் தேழு வருடங்கள் வாழ்ந்து விட்டேன். அன்று அவர் சொன்ன ஒவ்வொன்றும் இன்றுகூட உண்மைதான் என்று நான் கூறமுடியும்."

அந்தக் கிழமனிதன், முன்பு செக்கிறம் பெற்றிருந்து பின் பழுப்பாகி விட்ட பின்னல் குல்லாயைத் தலையிலிருந்து நீக்கி, புகைக் குழாயையும் எடுத்துவிட்டு, வழுவழுப்பான

வெண்கலத் தலையைத் தாழ்த்தியபடி, உறுதியாகச் சொன்னான் :

"ஆமாமய்யா, அதெல்லாம் உண்மைதான். நீங்கள் காண விரும்புகிறபடிதான் மனிதர்கள் காட்சியளிக்கிறார்கள். அவர்களை தயையுடன் நோக்குங்கள். அப்பொழுது அவர்களுக்கும் உங்களுக்கும் நன்மை செய்தவர்களாவீர்கள். அவர்கள் மிக நல்லவர்களாக ஆகிவிடுவர் ; நீங்களும் கூடத் தான். இது ரொம்பச் சுலபமானது ; இல்லையா?"

காற்று மேலும் மேலும் கனத்துச் சாடியது: அலைகள் உயர்ந்து துள்ளின ; பளபளப்பும் வெண்மையும் பெற்றுத் திகழ்ந்தன. கடல் மீது கண்ட பறவைகள் பெரிதினும் பெரிதாய் வளர்ந்து, வேகமாய் வெகு தொலைவினும் தொலைவாய் எற்றுண்டு போயின. மூன்று வரிசைப் பாய்களுடன் தெரிந்த இரண்டு படகுகளும் எப்போதோ அடிவானத்தின் நீல விளிம்பினுள் மறைந்து போயின.

தீவின் சரிந்த கரைகள் வெண்ணுரைப் போர்வை பெற்றன ; நீல நீர்த் தொகுதி பேரோசையுடன் மோதிச் சிதறியது ; ஓய்வற்ற, உணர்ச்சி நிறைந்த இரைச்சலை விடாது முழங்கிக்கொண்டிருந்தன ஸிக்காடப் பூச்சிகள்.

★

# மனிதர்களைப் பற்றி

ரோமுக்கும் ஜினேவாவிற்கு மிடையிலே ஒரு இடத்தில் கண்டக்டர் நாங்களிருந்த பெட்டியின் கதவைத் திறந்து, அழுக்குப் படிந்த தொழிலாளி ஒருவன் உதவியோடு ஒற்றைக் கண் கிழவன் ஒருவனைச் சுமந்து வந்து ஏற்றுவது போல் உள்ளே கொண்டு வந்து சேர்த்தான்.

எல்லோரும் இனிய மென்னகை சிந்தி 'வந்கிழடு தான்' என்று ஏகமாக ஒலிபரப்பினர்.

ஆனால் அந்தக் கிழவன் வலிமையுள்ளவனாக மாறி நின்றான். சுருங்கி வதங்கிப்போன கையை ஆட்டி தனக்கு உதவி செய்தவர்களுக்கு நன்றி அறிவித்து விட்டு, ரொம்பவும் அடிபட்டுப் பழசாகிப் போன தொப்பியை நரைத்த தலையிலிருந்து விசேஷ மரியாதை பாவத்தோடு நீக்கி விட்டு அவன் பெஞ்சுகளைத் தனது ஒற்றைக் கண்ணினால் கூர்ந்து நோக்கினான்.

'உட்கார அனுமதிக்கிறீர்களா?' என்று கேட்டான் அவன்.

பிரயாணிகள் கொஞ்சம் நகர்ந்து உட்கார்ந்தார்கள். அவன் ஆசுவாசப் பெருமூச்செறிந்தபடி அமர்ந்தான். எலும்பான முழங்கால்கள் மீது அவன் கைகள் தங்கின. பல்லில்லாத நல்லதனச் சிரிப்பால் பிரிந்தன அவன் உதடுகள்.

'ரொம்ப தூரம் போகிறீர்களா, தாத்தா?' என்று கேட்டான் எனது துணைவன்.

இல்லையில்லை. இங்கிருந்து மூன்றே மூன்று கெடிகள் தான்' என்பது அக்கிழவனின் உடனடிப் பதிலாக

ஒலித்தது. 'என் பேரனின் கல்யாணத்திற்குப் போகிறேன்...'

சில நிமிஷங்களுக்குப் பிறகு, வண்டிச் சக்கரங்களின் தாளந்தவறாத ஓசைகளுடன் இணைந்து போகும் வகையிலே, அவன் எங்களுக்குத் தன் கதையைச் சொல்லிக் கொண்டு வந்தான். புயலடிக்கும் வேளையிலே முறிந்து விட்ட மரக்கிளை போல அப்படியும் இப்படியும் அசைந்தாடிக் கொண்டிருந்தான் அவன்.

அவன் சொன்னான்: 'நான் லிகூரியாவைச் சேர்ந்தவன். லிகூரியவாசிகளாகிய நாங்கள் திடசாலிகள். என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன். எனக்குப் பதின்மூன்று மகன்களும் நான்கு மகள்களும் இருக்கிறார்கள். பேரக்குழந்தைகள் எத்தனையோ, அது எனக்கே தெரியாது. கல்யாணம் செய்து கொள்கிற இரண்டாவது பேரன் இவன். ரொம்ப அருமையான விஷயம், இல்லையா?'

மங்கிப் போயிருந்தாலும் மகிழ்வு குன்றி விடாத ஒற்றைக் கண்ணால் எங்கள் எல்லோரையும் பெருமையாகப் பார்த்தான் அவன்; தானாகவே சிரித்துக் கொண்டான்.

'எனது மன்னனுக்கும் நாட்டுக்கும் எத்தனை மக்கள் நான் அளித்திருக்கிறேன் பார்த்தீர்களா!' என்றான்.

'நான் என் கண்ணை எப்படி இழந்தேன்? ஆ, அது ரொம்ப நாளைக்கு முன் நடந்த விஷயம். அப்பொழுது நான் சுத்த சின்னப் பயல். என்றாலும் எங்க அப்பாவுக்கு உதவி செய்து கொண்டுதானிருந்தேன். கொடிமுந்திரித் தோட்டத்திலே அவர் மண்ணைக் கொத்திக் கொடுத்துக் கொண்டிருந்தார். எங்க பக்கத்திலே மண்ணு கரடுமுரடாய் கற்கள் நிறைந்ததாயிருக்கும். அதனால் அதிகக் கவனிப்பு தேவை. அப்பதான் எங்க அப்பாவின் பிக்காசு அடியிலேயிருந்து ஒரு கல்லு கிளம்பி கணக்காக என் கண்ணிலே

தெறித்து விட்டது. என்ன வலி வலித்ததென்று எனக்கு இப்ப ஞாபகமில்லை; ஆனால் அன்றைக்கு நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது என் முழி பிதுங்கி வெளியே வந்து விழுந்து விட்டது. ரொம்ப பயங்கரமான விஷயம் ஐயா அது! அதை எடுத்துப் பழைய இடத்திலே பொருத்தி வெதுவெதுவென்று ரொட்டி மாவை வைத்துக் கட்டுப் போட்டார்கள். இருந்தும், பிரயோசனமில்லை. கண் போனது போனது தான்!'

ஆரோக்கியம் குன்றித் தொங்கிய கன்னத்தை அழுத்தமாகத் தேய்த்துக் கொண்டே, மனோகரமான ஆனந்தப் புன்னகையை மறுபடியும் சிதறினான் அந்தக் கிழவன்.

'அந்தக் காலத்திலே இப்போ இருக்கிறது போல இவ்வளவு டாக்டரய்யாக்கள் கிடையாது. ஜனங்கள் முட்டாள்தனமாக வாழ்க்கை நடத்தினார்கள். ஆமாம், அப்படித்தான். ஆனால் அவர்களிடம் அன்பும் இரக்கமும் அதிகமிருந்தது. ஹே!'

இந்த இடத்தில், ஆழ்ந்த வரைகளும் பூஞ்சு பிடித்தது போல் தோற்றமளித்த பசிய சாம்பல் நிற ரோமங்களும் படிந்து தோலாகிப் போன, ஒரு கண் மாத்திரமே யுள்ள, முகம் சாமர்த்தியமும் தந்திரமும் கலந்ததொரு பாவம் ஏற்றது.

'என்னவ்வளவு வயசுக்கு நீங்களும் வாழ்ந்தால், நீங்களும் மனிதரைச் சரியாக எடைபோட்டுவிட முடியும். நீங்கள் அப்படி நினைக்கவில்லையா என்ன?'

கறுத்துக் கோணிப் போயிருந்த விரல் ஒன்றைக் கம்பீரமாக உயர்த்தி நீட்டினான், யாரையோ குற்றம் சாட்டுவது போல.

"மக்களைப் பற்றி நான் உங்களுக்குச் சில விஷயம் சொல்கிறேன், ஐயாமார்களே...

“என் தந்தை இறந்தபோது எனக்குப் பதிமூன்று வயசு. இப்பொழுது இருக்கிறதைவிடச் சிறியதாகத் தான் தோன்றினேன் அன்று. ஆனால் வேலை என்று வந்து விட்டாலோ நான் சோர்வேயற்று ஏக உற்சாகமாகத்தானிருந்தேன். என் அப்பாவிடமிருந்து எனக்கு வந்து சேர்ந்தது இந்தக் குணம் ஒன்றுதான். ஏனென்றால், இருந்த கடனை அடைப்பதற்காக எங்கள் நிலத்தையும் வீட்டையும் விற்க வேண்டியதாயிற்று, ஆகவே எங்கெங்கே வேலை கிடைக்குமோ அங்கெல்லாம் நான் என் ஒற்றைக் கண்ணையும் இரண்டு கைகளையும் வைத்து வேலை செய்தே பிழைக்க நேர்ந்தது...அது கஷ்டமாகத்தா னிருந்தது. ஆனால் வாலிபம் கஷ்டங்களைக் கண்டு பயப்படுவதில்லை. சரிதானே ?

எனக்குப் பத்தொன்பது வயதான போதுதான், நான் காதலிக்க வேண்டும் என்று விதிக்கப் பெற்ற பெண்ணைச் சந்தித்தேன். அவளும் என்னைப் போல ஏழைதான். ஆனால் உடலுரம் பெற்ற பெண்; என்னைவிடப் பலசாலி. சீக்காளியான கிழட்டுத் தாயோடு வசித்து வந்தாள். அவளும் என்னைப் போலவே, எதிர்ப்பட்ட வேலை எதுவானாலும் அதைச் செய்து பிழைத்து வந்தாள். குறிப்பிடத்தகுந்த அழகு வாய்ந்தவளல்ல அவள். ஆயினும் அன்பு மிகுந்தவள் ; அவளுக்கு நல்ல தலையிருந்தது. நல்ல குரலும் கூட. ஆ, அவள் என்னமாய் பாடுவாள் தெரியுமா ! தொழிற் பாடகி மாதிரியே தான். நல்ல குரல் இருக்கிறதென்றாலே அதற்கு மதிப்பு தனி தான். நான்கூடப் பழுதில்லாமல் பாடுவது வழக்கம்.

நாம் கல்யாணம் செய்து கொள்ளலாமா என்று அவளிடம் ஒரு நாள் நான் கேட்டேன்.

‘அது முட்டாள்தனமாகத் தான் முடியும், ஒற்றைக் கண்ணரே ! உன்னிடமும் சரி, என் கிட்டேயும் சரி, எதுவுமே கிடையாது. நாம் எப்படி வாழ்க்கை நடத்துவது ?’ என்று துயரத்தோடு சொன்னாள் அவள்.

அதுதான் முழு உண்மை. அவளும் நானும் வக்கற்ற வர்கள்தான். ஆனால் காதல் கொண்டு விட்ட இளம் ஜோடி களுக்கு வேறு என்ன வேண்டும்? காதலுக்கு இதர தேவை கள் மிகச் சொல்பம்தான் என்பது உங்களுக்கே தெரியும். எனது கருத்தை வலியுறுத்தி நான் வெற்றி பெற்று விட் டேன்.

'நல்லது. நீ சொல்வதும் சரிதான்' என்று இடா சொன்னாள். 'பரிசுத்த தேவமாதா இப்போது தனியாக வசிக்கும் உனக்கும் எனக்குஞ் உதவி புரிகிறாளே; நாம் இரண்டு பேரும் சேர்ந்து வாழத் தொடங்கினால் நமக்கு உதவிசெய்வது அவளுக்கு எவ்வளவோ சுலபமான காரிய மாகி விடும்!'

ஆகவே நாங்கள் பாதிரியாரைத் தேடிப் போனோம்.

'இது பைத்தியக்காரத்தனம்' என்றார் அவர். 'லிகூரியா வில் இப்பொழுதுள்ள நிலையில் போதுமான பிச்சைக்காரர் கள் இல்லாமலா போனார்கள்? இன்பமற்ற மனிதர்களே, நீங்கள் சைத்தானின் விளையாட்டுப் பொம்மைகள்; அவன் தூண்டுதலைத் தகர்த்தெறியுங்கள். இல்லையோ, உங்கள் பல வீனத்தின் விலையாக நீங்கள் கடுமையான காணிக்கை செலுத்த நேரிடும்.'

சமுதாயத்திலுள்ள இளம் வெட்டுகள் எங்களைப் பார்த்துச் சிரித்தன; கிழடு கட்டைகள் எங்களைக் கண்டித் தன. ஆனால் வாலிபம் பிடிவாதம் நிறைந்தது, தனது போக் கிலே புத்திசாலித்தனமானது! கல்யாண நாள் வந்து சேர்ந் தது. முந்திய காலத்தை விட அன்றையப் பார்த்து நாங்க ளொன்றும் அதிகப் பணக்காரர்களாகி விடவில்லை. எங்கள் கல்யாண இரவிலே எங்கே கிடந்து தூங்குவது என்கிற விஷயம் கூட எங்களுக்குப் புரியவில்லை.

'வயல் வெளிகளுக்குப் போவோம். ஏன் கூடாது? மக்கள் எங்கிருந்தாலும் சரி, தேவமாதா அவர்களிடம்

அன்பாகத்தா னிருக்கிறாள்' என்று இடா சொன்னாள்.

அப்படியே நாங்கள் முடிவு செய்தோம் - பூமியே எங்கள் படுக்கையாகட்டும்; வானமே எங்களுக்கு மேல்விதானமாக அமையட்டும்.

இப்பொழுது வேறொரு கதை ஆரம்பமாகிறது, ஐயா. நீங்கள் கவனமாய்க் கேளுங்கள். ஏனெனில் எனது நீண்ட வாழ்விலேயே இதுதான் மிகச் சிறந்த கதை.

எங்கள் கல்யாணத்திற்கு முந்திய தினம் அதிகாலையில், வயோதிகக் கியாவன்னி சொன்னார் - அவருக்காக நான் ஏகப்பட்ட வேலைகள் செய்து முடித்திருந்தேன் - இதுமாதிரிச் சின்ன விஷயங்களைப் பற்றிப் பேசுவதை அவர் வெறுத்ததால், என்னிடம் அவர் மூக்காலே முணமுணத்தார் :

'யுகோ, பழைய ஆட்டுப்பட்டி இருக்கிறதே அதை நீ சுத்தப்படுத்த வேண்டும். சுத்தமான வைக்கோலைக் கொஞ்சம் அங்கே போட்டு வை. அது காய்ந்து கிடக்கிற தரைதான். ஒரு வருஷத்திற்கு மேலாகவே அங்கு ஆடுகள் அடைபடவில்லை. இருந்தாலும், நீயும் இடாவும் அதிலே வசிக்க விரும்பினால் முதல்லே அந்த இடத்தை சுத்தம் செய்து கொள்வது நல்லது.'

இப்படியாக எங்கள் வீடு அமைந்து விட்டது.

குஷியாகப் பாடிக்கொண்டே அந்த ஆட்டுக் கொட்டிலைச் சுத்தம் செய்யும் வேலையில் நான் மும்மரமாக யிருந்த போது, தச்சு வேலை செய்யும் காஸ்டன்ஸோ அங்கே கத வருகே வந்து நிற்பதைப் பார்த்தேன்.

'ஆகவே நீயும் இடாவும் குடித்தனம் போடப் போகிற இடம் இதுதானாக்கும்? சரிதான், படுக்கை எங்கேப்பா? எங்க வீட்டிலே அதிகப்படியாக ஒரு படுக்கை கிடக்குது.

இதைச் சுத்தம் செய்து முடித்ததும், வந்து அதை எடுத்துக் கொள்' என்றான்.

நான் அவன் வீட்டிற்குப் போகையில், வழியில் கடை வைத்திருந்த வம்புக்காரி மரியா கத்தினாள்: 'அசடுகள், கல்யாணம் செய்து கொள்கிறதாம்! அதுவும் பெயருக்கு ஒரு விரிப்போ தலையணையோ கூட இல்லாமல்! ஏய் ஒற்றைக்கண் மனுஷா, உனக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கு. பரவால்லே, உன் மணப் பெண்ணை என்னிடம் அனுப்பிவை...'

பக்க வாதத்தினாலும் காய்ச்சலினாலும் வதையுறும் நொண்டி எட்டோர் வியானோ தனது வீட்டு வாசலில் நின்றபடியே அவளை நோக்கிக் கூச்சலிட்டான்:

'விருந்தாளிகளுக்காக அவன் எவ்வளவு ஒயின் சேர்த்து வைத்திருக்கிறான் என்று கேளு. ஆகா, மனுஷர்கள் எவ்வாறு தான் இப்படிப் புத்தி கெட்டுப் போவார்களோ!'..."

அந்தக் கிழவனின் கன்னத்து மடிப்புகள் ஒன்றின்மீது மினுமினுத்தது கண்ணீரின் ஒளித் துளி ஒன்று. அவன் தலையைக் கொஞ்சம் பின்னுக்குத் தள்ளி ஓசையற்ற சிரிப்புச் சிரித்துக்கொண்டான். அதனால், அவன் தொண்டையில் எலும்பாகத் துருத்தி நின்ற 'ஆதாம் ஆப்பிள்' ஏறி இறங்கியது; தளர்ந்து தொங்கிய சருமம் ஆடி நடுங்கிக் கொண்டிருந்தது.

சிரிப்பினால் திக்குமுக்காடி, சிறுபிள்ளைத்தனமான உற்சாகத்தினால் கைகளை ஆட்டி அசைத்துக் கத்தினான் அவன்: 'ஓ, ஸின்யாரி, ஸின்யாரி! கல்யாணத்தன்று காலையிலே எங்கள் வீட்டுக்கு வேண்டிய எல்லாம் எங்களுக்கு வந்து சேர்ந்திருந்தன — மடோனா* சிலை ஒன்று, பாத்திரங்கள், துணிமணிகள், தட்டு முட்டுச் சாமான்கள், எல்லாம். எல்

---

* தேவமாதா

லாம் என்றுதான் சொல்கிறேனே! இடா சிரித்தாள், அழு தாள். நானும் கூடத்தான். மற்றவர்கள் எல்லோரும் சிரித் தார்கள் — கல்யாண நாளிலே அழுவது மோசமான விஷ யம்தானே. ஆகவே எங்களைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் எங்களைக் கேலி செய்து சிரித்தார்கள்.

வலின்யாரி, நமது சொந்தக்காரர்கள் என்று சொல்லிக் கொள்வதற்கு மனிதர்கள் இருந்தாலே அதன் இனிமை தனிதான். அதிலும் அவர்கள் நம்க்குச் சொந்தமானவர் கள், மிகவும் நெருங்கியவர்கள், நமது வாழ்க்கையை அற்ப மாகவும் நமது இன்பத்தை விளையாட்டுப் பொருளாகவும் கருதாத உண்மை மனிதர்கள் அவர்கள் என்று உணர்ந்தால் அதன் ஆனந்தமே அலாதிதான்.

அடாடா என்ன அருமையான கல்யாணம் அது! என்ன அற்புதமான தினம்! சமுதாயம் பூராவும் அவ் விசேஷத்திற்கு விஜயம் செய்தது. ஒவ்வொருவரும் எங்கள் தொழுவத்திற்கு வந்ததனால் அது அவ்வேளையிலேயே செல்வமய மாளிகையாக மாறிவிட்டது... எல்லாம் எங்க ளிடமிருந்தன! ஒயினும் பழமும், மாமிசமும் ரொட்டியும். ஒவ்வொருவரும் உண்டார்கள்; எல்லோரும் உற்சாகமாக யிருந்தார்கள்... அது ஏனென்றுலோ, வலின்யாரி, மக்க ளுக்கு நல்லது செய்வதைவிட உயர்ந்த இன்பம் வேறெதுவு மில்லை. என்னை நம்புங்கள், அதைவிட இனியது, அதனி லும் அதிக அழகானது வேறொன்றும் கிடையாது.

பாதிரியார் கூட வந்து விட்டார். அவர் அழகான தொரு பிரசங்கம் செய்தார். அவர் சொன்னார்:

'உங்கள் எல்லோருக்கும் உழைத்தவர்கள் இரண்டு பேர் இதோ இருக்கிறார்கள். அவர்கள் வாழ்விலேயே மிகச் சிறந்ததாக இந்நாள் விளங்கும்படி நீங்கள் உங்களால் இயன் றவை அனைத்தையும் செய்து விட்டீர்கள். எது எப்படி நடக்கவேண்டுமோ, அப்படியே யாயிற்று. உங்களுக்காக

உழைத்தவர்கள் இவர்கள். செப்பு, வெள்ளிக் காசுகளை விட உழைப்புதான் மிக முக்கியமானது. நீங்கள் பெறக் கூடிய ஊதியத்தைப் பார்க்கிலும் என்றுமே மிக உயர்ந்தது உழைப்பு. பணம் போய்விடும், உழைப்பு மிஞ்சும்... இவர்கள் சந்தோஷமாகவும் அடக்கமாகவும் இருக்கிறார்கள். இவர்கள் வாழ்க்கை கடினமானது தான்; என்றாலும் இவர்கள் முணமுணக்க வில்லை. இனியும் இவர்கள் வாழ்க்கை கொடுமைகள் அதிகரித்ததாகவே யிருக்கும்; எனினும் இவர்கள் முணுமுணுக்க மாட்டார்கள். இவர்களுக்குத் தேவை ஏற்படும் காலத்தில் நீங்கள் உதவி புரிவீர்களாக. நல்ல கைகளும் திண்ணிய இதயமும் பெற்றவர்கள் இவர்கள்.'

இப்படி எனக்கும், இடாவுக்கும், சமுதாயம் முழுமைக்கும் புகழ் மொழிகள் பல பாடினர் அவர்."

இழந்த இளமைக் கனவை மீண்டும் பெற்ற தனது ஒற்றைக் கண்ணால் எங்கள் எல்லோரையும் கவனித்த அக்கிழவன் முடித்தான்:

"இதோ, ஸின்யாரி, மக்களைப் பற்றி நான் உங்களுக்கு கொஞ்சம் சொல்லி முடித்து விட்டேன். அது நன்றாகத் தானே யிருந்தது, இல்லையா?"

# எதிர்பாருங்கள்!

○

பயங்கரம், காதல், கொடுமை பேய்த்தனம்,

எல்லாவற்றுக்கும் மேலாக

ஒரு மர்மம்!

அது என்ன?

★

வல்லிக்கண்ணன்

எழுதும்

## 'இருளடைந்த பங்களா'

என்ற புத்தகத்தைப் படித்தால் புரியும்

இது ஒரு 'வெண்புறு வெளியீடு'!

விலை 6 அணா

வெண்புறுவின்
மூன்றாவது வெளியீடு!

கணவன் ஒரு கோழை. கைப்பிடித்த மனைவியை ஆபத்து வேளையில் கைவிட்டு ஓடிய அதமன் அவன்.

அவளைக் காப்பாற்றினான் ஓர் அந்நியன். அவனுடன் வாழத் தயாரானாள் அவள். தாயுமானாள்.

ஒரு நாள் மீண்டும் தோன்றிய கணவன் தாலியின் பெயரால் அவளைக் கோரினான்.

அவள் யாருடன் வாழ்வது? பெரிய சமூகப் பிரச்னை இது. இதை அற்புதமாகச் சித்தரிக்கும் அருமையான கதை

# வாழ் விரும்பியவள்

வல்லிக்கண்ணன் எழுதியது

விலை எட்டு அணா

# தயாராகிறது!

**அருமையான நவீனம்**

வாழ விரும்பிய ஒரு பெண்ணின் கதை. அவளை வாழ்விக்க முன் வந்த வாலிபன் ஒருவனின் கதையும் தான்!

அவர்கள் சந்திப்புகள் சுவாரஸ்ய மானவை; அவர்களது எண்ணங்கள் உயர்ந் தவை; அவர்களின் போக்கு பழமை விரும்பி களுக்குப் பிடிக்காதவை.

இனிய தமிழில் எழுதப்பட்ட அழகான நாவல். கதைச் சுவையும் கருத்து நயமும் நிறைந்தது. புத்தகமாக விரைவில் வெளி வரும்.

'செவ்வானம்'

கோரநாதன் எழுதியது

**எ... மலைப் பதிப்பகம்**

அ... திருச்சி ஜில்லா

...ted at Sh.nti Press, Madras-1